

# ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும்

குணா

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும்

16 11 94

## குணா

தமிழக ஆய்வரண்
பெங்களூர்.

| | | |
|---|---|---|
| பொத்தகத்தின் பெயர் | : | ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும் |
| ஆசிரியர் பெயர் | : | குணா |
| வெளியிடுவோர் | : | தமிழக ஆய்வரண் பெங்களூர். |
| தொடர்புக்கு | : | FORT 3155/A, 11th Main H A L IInd Stage Bangalore-560 008. |
| அச்சிட்டோர் | : | தமிழோசை அச்சகம் 84, அபிபுல்லா சாலை சென்னை -17. |
| விலை | : | ரூபாய் ஐந்து |
| பதிப்பு | : | முதற் பதிப்பு சூன் 1991. |
| உரிமை | : | தமிழக ஆய்வரண் |

அன்பிற்கினியீர் !

'உள்ளவற்றிலிருந்து உண்மையை நாடுவது' என்னும் முறையில் தமிழகத்தைப் பற்றிய பல்வேறு சிக்கல்களை ஆராய முனைபவர்களின் ஒரு பொது மன்றமே இவ்வாய்வரண்.

ஒருவரின் கல்வி, கேள்வி, அரசியல் போன்ற பின் புலத்தைப் பாராமல் தமிழகத்தின் வாழ்வியலைப் பல்துறைகளில் வரலாற்று முறையில் பொருட்செறிவுடன் ஆராய விழைபவர்கள் அனைவரையும் போற்றி ஊக்கு விக்கப் பிறந்ததே இவ்வாய்வரண்.

எண்ணும் திறம் பெற்ற அறிவர்கள் பலதிறத்தவர் களிடத்திலும் தமிழகத்தின் பரந்த பெரும் மக்களிடத் திலும் அவ்வாறு ஆய்ந்தறிந்த உண்மைகளை முன் வைத்து, அதை யொட்டிய விரிவான, வளமான கருத்துப் போரை எழுப்பி, குடியாட்சி உணர்வும் நாட்டுப் பற்றுணர்வும் இணைந்ததோர் அகன்ற இயக்கத்தை வளர்க்கவும் வலிமையூட்டவும் வல்ல மெய்யியலையும் கோட்பாட்டையும் (Philosophy and Theory) அடித்தள மாக வடித்தெடுப்பதே இவ்வாய்வரணின் இறுதி குறிக்கோள்.

தமிழகத்தின் பல்துறைகளைப் பற்றி ஆய்வரண் நடத்துகின்ற ஆய்வுகளை தொடர்ந்து, தோழர் குணாவின் ~~முதல்~~ கட்டுரை 'ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும்' என்னும் கட்டுரை வெளியிடப்படு

கின்றது. அவர் எழுதி 20. 3. 1982 அன்று ஆய்வரண் உருட்டச்சில் வெளியிட்ட 'தமிழகத்தில் மத மாற்றம்' என்னும் இரண்டாவது கட்டுரையும் இக்குறு நூலில் இடம் பெறுகிறது.

தமிழ்க் குமுகத்தை மாற்றியமைப்பது என்னும் கடமையை உணர்ந்து செயல்படுவர் யாவரும் ஆய்வரணின் இம்முயற்சியைப் பாராட்டி இணைந்து ஒத்துழைப்பர் என உறுதியாக நம்புகின்றோம்.

இவண்,
இணைப்பாளர்,
தமிழக ஆய்வரண்

பெங்களூர்.
20-6-91

# முன்னுரை

மதுரையிலுள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் தலித் மக்கள் ஆய்வு மையம் 1991 மார்ச் 15 முதல் 17 வரையில் "அறிவர் அம்பேத்காரின் விடுதலைக் கோட்பாடும் இன்றைய தலித் மக்களின் விடுதலையும்" என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்த முடிவு செய்து, என்னையும் ஒரு கட்டுரையை எழுதிப் படிக்கச் சொல்லி விடுத்த அழைப்பை வைத்து நான் எழுதி விடுத்த கட்டுரை இது. இக்கட்டுரை படிக்கப்பட்டதோ என்னவோ தெரியவில்லை. கிருத்துவ இறையியல் வட்டங்களில் சாதியொழிப்பு உணர்வு மேலோங்கி வருகையில், இந்த அணியினரிடம் சில கருத்துக்களை எடுத்துரைக்கவென்றே எழுதப்பெற்ற கட்டுரை என்பதனால், இதற்கேயுரிய தனி வரம்புகளுண்டு. இதனை உளமுவந்து வெளியிட முன்வந்து என்னைத் தொடர்ந்து ஊக்கிவரும் தொலைபேசித் தொழிலக தொழிலாளர்களுக்கு என்றும் நன்றி மறவேன். அவர்கள் எம்மிடம் காட்டி வரும் அன்புக்கு இன்னொரு விளக்கமாக இந்தக் கட்டுரை ஒரு குறுநூல் வடிவில் வெளிவருகின்றது.

குணா

8. 6. 1991

## உள்ளே

பக்கம்

1. ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும் .... 7

2. தமிழகத்தில் மதமாற்றம் ... 40

# 1. ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும்

சாதி ஒதுக்கத்திற்கு உள்ளாகி மாக்களெனத் தள்ளப்பட்ட தமிழ் மக்கள் புறயர் [1] (பறையர்), பள்ளர், சாணார், மீனவர் எனப்படும் நான்கு பெரும் பிரிவின ராக இருந்துவந்துள்ளனர். இவர்களில் புறயரும் பள்ள ரும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டு அல்லலுற்று வந்தனர். சாணார்களோ காணாமை என்னும் அதைவிட பெரிய கொடுமைக்குள்ளாகியிருந்தனர். 'பறையனைத் தொட்டால் தீட்டு ; சாணானைக் கண்டாலே தீட்டு' என்னும் பழமொழி அதற்குச் சான்று சொல்லும்.

தமிழகத்திலுள்ள இந்த மூன்று பெரும் பிரிவினர்களில் சாணார்கள் என்றழைக்கப்பட்டு வந்த இன்றைய நாட்டாரோ, ‘உறவின் முறை’ போன்ற நெறிகளைக் கடைபிடித்தும், மேலைநாட்டு கிருத்துவ விடையூழியர்களின் உதவியைக் கொண்டும், தங்களின் சொந்த முயற்சிகளினாலும், அரசு உதவியின்றியே நன்கு வளர்ந்து தலை நிமிர்ந்து நிற்கவல்ல ஒரு வருங்காலத்தையும் வாழ்வியலையும் தங்களுக்குள் தாங்களாகவே அமைத்துக் கொண்டுள்ளனர். (தந்தை யாரெனத் தெரியாத) கடவுளின் மக்கள் எனப் பொருள்பட காந்தியார் சூட்டிய ‘அரிசனன்’ என்ற இழிப் பெயரைச் சான்றிதழாக்கிக் கொண்டோ, ‘பஞ்சமர்’ என்னும் சொத்தைப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டோ, ‘திருக்குலத்தார்’ என்னும் பட்டைத் திருநாமத்தை அணிந்துக் கொண்டோ, (தொல்தமிழரென்னும் உண்மையை மறைக்கின்ற) ‘ஆதிதிராவிடர்’ என்னும் போலிப்பெயரை வைத்துக் கொண்டோ விடுதலையைத் தேடிய மக்களாக இவர்களில்லை. தங்களை அடிமைப்படுத்தி ஆழந்தெரியா அவலங்களுக்கும் கொடுமைகளுக்கும் பண்டு தொட்டு ஆட்படுத்திவந்த மேல்சாதிகளின் கடைக்கண் பார்வைக்கும் எல்சோற்றுக்கும் இரந்து நிற்கும் உளபாட்டுற்கும் இரையாகாத இந்த நாட்டார் பெருங்குடியினரோ ‘தலித்’ போன்ற வேற்றுமொழி பெயரொட்டிகளையும் கூட தொடவில்லை. குறிப்பாக புறயரில் தன்மான மிக்கோர் கூர்ந்து கவனிக்க வேண்டிய உண்மை இதுவன்றோ ?

‘தலித்’ என்னும் வடசொல் புறயரிலும் பள்ளரிலும் தெலுங்கரான சக்கிலியரிலும் சிலர் மட்டுமே நாடுகின்ற பெயர் பலகையாக இருப்பதே கண்கூடு. அரை நூற்றாண்டு காலம் வழங்கி வந்துள்ள ஆதிதிராவிடரென்னும் திருப்பெயரைப் பெயர்த்துவரும் புதிய பட்டப் பெயர் அதுவாகும்.

சாதியம் ஒழிய வேண்டுமென்னும் துடிப்பு சாதி ஒதுக்கமென்னும் பொல்லா கொடுமைக்கு ஆட்பட்டு வந்த மக்களிடம் காணப்படுகின்ற இயல்பான ஒரு நாடித்துடிப்பு. ஆங்கிலேயர் காலம் வரையில் வழிப் பறித்தலையே தொழிலாகக் கொண்டிருந்த பழங்குடி மக்களும் தாங்கள் சாதியால் 'கள்ளர்' எனச் செம் மாந்துச் சொல்ல தயங்காத நிலையில், தாங்கள் புறயர் களென்றோ பள்ளர்களென்றோ வெளிப்படையாகச் சாதிப்பெயரைச் சொல்லிக் கொள்ளவும் கூச்சம் மேலிட்டு நிற்கின்ற புறயருக்கும் பள்ளருக்கும் மட்டுமே சாதி ஒழிய வேண்டுமென்பது ஓர் இன்றியமையா தேவையாக இருந்து வருவதே உண்மை.

இந்த நூற்றாண்டின் தொடக்க நிலையில் தோன்றி சில பத்தாண்டுகள் கூட உயிர்வாழ இயலாது போன பறையர் பெருமக்களவை (பறையர் மகாசனசபை) பெயர் மாறி உருமாறி 'ஆதி திராவிடர் இயக்கம்' என்றான போதே இந்த தொல்குடியினர் காணப் போகின்ற 'விடுதலை' எந்த வடிவிலிருக்குமென்பது விளங்கியிருக்க வேண்டும். தொல்தமிழர் (ஆதித்தமிழர்) இயக்கமென அது மறுபிறவியெடுத்திருந்தால், அதனுடைய இலக் கணங்களும் நோக்குகளும் போக்குகளும் பயணங் களும் தமிழ் தேசிய ஓர்மையுடன் கூடி இயல்பால் வேறாக இருந்திருக்கும். அதுவுமன்றி இதுவுமன்றி போன இவர்களின் அரசியல் இயக்க வரலாறு பின்னால் அம்பேத்கரியத்திடம் அடைக்கலம் புகுந்த காதையாகப் போனது. இத்தொல் தமிழரிடம் வளர்ந்த தலைமை களெல்லாம் புதிய பார்ப்பனிய ஒப்போலை அரசியலைக் கொழுகொம்பாகத் தழுவி தன்னிலையற்ற ஒட்டுண்ணி களாய் கெடுவதற்கு இஃது ஒரு காரணமானது.

## அம்மம்மா எவ்வளவு பெரிய வீழ்ச்சி!

புறயர்கள்தாம் தமிழ் நிலத்தின் தொல்குடி. இதை மாற்றாரும் ஏற்றுக் கொள்கின்றனர். புறயரில் அறிவர்

களாக இருந்த வள்ளுவர்கள் தாம் கணியர்கள். (வட மொழியில் பகுதகாச்சாயனர் எனப்படும்) பக்குடுக்கை நன்கணியார்தான் அணுக்கொள்கையை உலகுக்கே ஆக்கித் தந்தவர். சமண ஃபலசூத்தம் என்னும் புத்தச் சமய நூலின் சீனமொழியாக்கம் இதற்குச் சான்று சொல்கின்றது. இந்த வள்ளுவக் கணியர்கள்தாம் தொல் அறிவியலார்; தொல்வானியலார்; தொல் கணக்கியலார்; தொல் மெய்யியலார். வள்ளுவர்களில் அறிவர் எனப்பட்டோர்தாம் பிற்கால சித்தர்கள் (மருத்துவர்கள்.) கணி ஆதன் (கணாதன்) என்னும் வள்ளுவர்தான் சிறப்பியம் (வைசேடிகம்) என்னும் மெய்யியலுக்கு ஒரு தனி நூலெழுதியவர். இந்த வள்ளுவக் கணியர்கள் ஆசீவர்களெனப் பெயரிடப்பட்டு புத்தச் சமயத்தாராலும் சைனராலும் எள்ளி நகையாடப்பட்டரெனினும் அதே ஆசீவகரின் மெய்யியல் கூறுகளை அறிவுக் களவாடி தம்வயமாக்கிக் கொண்டதனால்தான் சைன, புத்த, பார்ப்பன மெய்யியல் பள்ளிகளே தலையெடுத்தனவென்பதுதான் உண்மை.

அதேபோல், புறயரில் இரு பிரிவினரான பாணர்களும் விறலியரும்தாம் உலகுக்கு ஏழிசையை ஆக்கித் தந்தவர்களாவர். கடைக்கழக (கடைச்சங்க)த் தமிழ் இலக்கியங்களைப் பாடியோரில் பாணரும் அவர் மரபினரும்தாம் பெரும்பாலோராக இருக்கின்றனர். உலக நூல்களில் தனக்கு ஈடு தானேதானெனச் சூளுரைத்து நிற்கின்ற திருக்குறளை ஆக்கிதந்தவரும் இந்த வள்ளுவ மரபினர்தான். இக்கால தமிழிலக்கியம் பிற உலக மொழிகளில் தோன்றியுள்ள தற்கால இலக்கியங்களுக்கு ஈடான நூல்களை கொண்டிராமல் இருக்கலாம். ஆனால் இரண்டாயிரத்து அய்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்ட தமிழ்க் கழக (சங்க) இலக்கியத்திற்கு ஈடான இலக்கியம் பிற உலக மொழிகளில் இல்லையென அறிந்தோர் சொல்கையில்,

இன்று கடையரிலும் கடையராக வைக்கப்பட்டு இழித்தும் பழித்தும் ஒடுக்கப்பட்டு வந்த புறயரில் அறிவரால் அன்றே அவ்வளவு உயரமான அறிவுமுகட்டை எவ்வாறு எட்ட முடிந்த தென்பதே ஆய்வாளருக்கும் மலைப் பூட்டுவதாக உள்ளது. இஃது அறிவுத்துறையில் அவர்களின் வீழ்ச்சி!

தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற 'பார்ப்பனர்த் தேயம்' ("மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்"), 'அறிவன் தேயம்' என்பவற்றுள் அய்ம்பேராயம் என்னும் ஆட்சிக்குழுவில் அரசனுக்கு அடுத்த 'ஆசான் பெருகணி' (அரசகுரு) என்னும் மிக உயர்ந்த பதவியிலிருந்து வந்த வள்ளுவக் கணியர்கள் இன்னும் நீக்கப்படாதிருந்த அரசுகள்தாம் அறிவன் தேயங்கள் எனக் குறிக்கப் பெற்றன. ஆசான்கள் என்ற பட்டம் முதலில் வள்ளுவர்களுக்கு மட்டுமே இருந்து வந்தது. தொன்மையில் மக்களுக்குக் கல்வி புகட்டி வந்த ஆசிரியர்கள் இவர்கள்தாம்.

வடதமிழ் நாட்டில் முக்காவல் நாடு என்னும் நாடு இருந்துவந்தது. நூற்று இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வந்த பண்டைய சேர, சோழ, பாண்டியரின் கூட்டணியை உடைத்தவனெனச் சொல்லப்படும் காரவேலன் என்னும் கலிங்கத்து அரசன் தமிழ்க்கூறும் நல்லுலகின் காவலரணாக இருந்துவந்த, இந்த முக்காவல் நாட்டை வீழ்த்தியப் பின்னர்தான் தமிழினத்தின் வீழ்ச்சிப்படலமே தொடங்கியதெனலாம். பள்ளு என்னும் பெயர் பள்ளருக்கும், பள்ளிகளுக்கும் பொதுவான பெயராக (பறை முற்றினால் பள்ளு; பள்ளு முற்றினால் படையாச்சி) இருந்து வந்துள்ளதென்பதையும், பல்லவரின் ஆட்சி எங்களுடைய ஆட்சிதானென சில பள்ளரும் பள்ளிகளும் உரிமைக் கொண்டாடுவதையும் முதலில் வள்ளுவர்கள்தாம் பல்லவர்களுக்கு முடிச்சூட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திவைத்தனரென்பதையும்

போன்ற வரலாற்றுச் செய்திகளும், (அப்பல்லவர்கள் தங்களை பாரதுவாசக் கோத்திரத்துப் பார்ப்பனரெனச் சொல்லிக் கொள்ளத் தலைப்பட்டதற்கு முன்னர்) புறய ரும் அவர் வழிவந்த பள்ளரும் நாடாண்டு வந்த மரபின ரெனப் பறைச்சாற்றி நிற்கின்றன. இவையெல்லாம் அப் புறயரின் அரசியல் வீழ்ச்சியைத்தாம் சுட்டி நிற்கின்றன.

காணியாட்சியென்பது தமிழகத்திற்கேயுரிய நிலக் கிழமைச் (Feudal) சொத்து வடிவம். ஆங்கிலேயர் ஆண்ட காலம் வரையில் (வேளாளரும் பார்ப்பனரும் போக) வடார்க்காடு, செங்கை போன்ற வடதமிழ் மாவட்டங்களில் புறயருக்கும் கூட காணியாட்சி இருந்து வந்துள்ளது. ஆற்றுப் படுகைகளிலும் பிறவிடங்களிலும் வண்டல் மண்ணை அலைத்து அரித்து பொட்டுத் தங்கமெடுக்கவோ, குழிவெட்டித் தங்கத்தை வெட்டி யெடுத்து உருக்கவோ கற்றவர்கள் தென்னகத்திலேயே அரிப்பறையர் எனப்பட்ட புறயர் பிரிவினர் மட்டுமாவர். தொன்றுதொட்டு இரும்புக்கனியத்தை வெட்டியெடுக்க வும், உலைவடித்து உருக்கவும், கரிஇரும்பாகவும் பஞ்சிரும்பாகவும் வார்க்கவும் செய்து வந்த கட்டிப் பறையர் சேலத்தில் ஆக்கிய எஃகு பாளங்கள்தாம் ஊட்சு எஃகு (Wootz Steel) என்னும் பெயரில் அரபு வணிகர்களின் வழியாக கிரேக்கம், மெசொப்பத்தாமியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இத்தகைய தொழில் தேர்ச்சிப்பெற்ற தொல்தமிழரா பின்னர் பறையரென இழித்துரைக்கப்பட்ட அடிமைச் சாதியின ராகக் கெட்டனர்? பள்ளிகள் போன்றோர் மட்டும் பண்ணையாட்கள் என்னும் அரை அடிமைச்சாதிகளாக நிற்க, புறயரும் பள்ளரும் மட்டும் ஏன் பண்ணை யடிமையென்னும் முற்றடிமைச் சாதிகளாகிக் கெட்டனர்? இதுவன்றோ பொருளியல் வீழ்ச்சி!

பாட்டுக்கும் இசைக்கும் கூத்துக்கும் இலக்கணம் கண்டதே (புறயரில் உள்ளடங்கிய) பாணர், கூத்தர்

மரபுதானென்பது போய், தமிழிசையென்பதே இன்று 'கருநாடக சங்கீத'மாக பெயர் திரிந்தும் பொருள் திரிந்தும் போயுள்ளது; இசையைக் கற்க கூடாதென்னும் தடை விதிக்கப்பட்டிருந்த பார்ப்பனரின் முற்றுடைமை யாகி போய் நிற்கின்றது. ஆறு வள்ளுவர்களிடம் கோயில் அறங்காப்புப் பொறுப்பை ஒப்படைக்கின்ற பண்டைய வழக்கு மறைந்து போய், இந்த வள்ளுவர்களின் பண்பாட்டு வீழ்ச்சியைப் பற்றிய ஒப்பாரிதான் நம் செவிகளைத் துளைத்து வருகின்றது.

## மீட்பரைத் தேடி

இவை போன்ற புலம்பல்களை நிறுத்தி இன்றைய நடப்புக்கு வந்தால், ஒடுக்குண்டுவந்த தொல்தமிழர்கள் நேற்று வரையில் எத்தகைய விடுதலையைத் தேடத் தலைப்பட்டனரென்பது விளங்கும். சாதி ஒதுக்கத்தின் அறிவுக்கொவ்வா வரம்புகளைப் பார்த்துவிட்ட வழி யறியா மக்களாகிய புறயரும் பள்ளரும் நாட்டாரும் சாதி இழிவிலிருந்து மீளோமாவென எண்ணி ஏங்கிய வண்ணம் பத்தொன்பதாவது நூற்றாண்டிலும் தங்களுக் கென சில மீட்பர்களை தேடத் தொடங்கினர். அஃது அகமை மீட்சியாகத்தான் இருந்தது. ஆனால் புறமை மீட்சிக்கான சில முன்னிலைகளும் அதற்குள் இருக்கத் தான் செய்தன. அந்த மீட்பர்களோ பிறநாட்டுச் சமயக் குரவர்களாகவும் குமுகப் புரட்சியராகவும் இருந்தனர்.

மதவழியில் தொல்தமிழருக்கு மீட்பர்களாக அறிமுக மான இருவருள் ஒருவர் இயேசு கிருத்து. முகமது நபி இன்னொருவர். இவ்விருவருள் தொல்தமிழரில் மிகப் பெரிய பகுதியினரின் வாழ்வியல் மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் இயேசு கிருத்துவென்னும் மீட்பர் மாதிரிதானென்பதை மறுக்கலாகாது. மேலை நாட்டு கிருத்துவ விடையூழியர்கள் கொண்டுவந்த அந்த

மீட்பரைத் தெய்வமெனத் தழுவி மதமாறிய புறயரிடத்திலும் பள்ளரிடத்திலும் நாட்டாரிடத்திலும் மீனவரிடத்திலும் மதமாற்றத்தால் கண்பட காணத்தக்க நல்ல பல வாழ்வியல் வளர்ச்சிகளும் பண்பாட்டு மாற்றங்களும் விளைந்தன. குலத்தொழிலாகிய அடிமைத் தொழிலை விட்டு வேறு தொழில்களைத் தேடுகின்ற வாய்ப்பும் பொதுக்கல்வியைப் பெறுகின்ற வாய்ப்பும் இவர்கள் கண்ட பாலைவனச் சோலைகளாயின. மதமாற்றத்தால் சாதிநெறி கெட்டுவிடுமென அஞ்சி, மதமாறிய இக்கீழ்ச் சாதி மக்களைத் தாக்குவது, இவர்களின் குடிசைகளைக் கொளுத்துவது, ஊர்ப்புறக்கணிப்புச் செய்வது போன்ற அடாத செயல்களில் ஈடுபட்டு வந்த மேல்சாதியினரின் கொடுமைகளை எதிர்த்துத் தற்காப்பு வன்முறையில் ஈடுபடுகின்ற புதிய துணிவும் தெம்பும் அப்பேதை மக்களுக்கு மதமாற்றத்தால்தான் வந்தது. ஆங்கிலேயர் காலத்தில் இவர்களிடம் ஒரு சிறிய நடுத்தர வகுப்பும் தோன்றியது.

இசுலாமிய மதத்திற்கு மாறிய தொல்தமிழர்கள் எண்ணிக்கையில் சிலரேயாயினும், முகமது நபியைத் தம் மீட்பராக நம்பி அகமை விடுதலையையும் புறமை மாற்றங்களையும் தேடிக் கொண்டனர்.

மதமாற்றத்தின் வழியில் வந்த அகமை விடுதலை நாட்டத்தை அடுத்து, அரசியல் வழியில் சிலருக்கு பெரியாரும் அம்பேத்கரும் மீட்பர்களாகத் தோன்றினர். ஒரு சிலருக்குக் காரல் மார்க்சும் ஒரு மீட்பராகத் தென்பட்டார். ஆனால் அன்றாட வாழ்வியல் பயன்களைப் பொறுத்தவரையில், இந்த அரசியல் மீட்பர்களால் விளைந்த நன்மையோ மதமாற்றத்தால் வந்த நன்மைக்கும் குறைந்த அளவினதாகவே இருந்ததும் இருப்பதும் கண்கூடான (சிலருக்கு கசக்கின்ற) உண்மை.

தேசிய இனங்களின் சிறைக்கூடமாகிய 'இந்தி'யா வென்னும் பன்னாட்டின அரசில் தமிழகம் அடைப் பட்டுக் கிடக்கின்ற இன்றைய நிலையில், இந்தி(ய) அரசுச் சட்டத்தின் கீழ் எல்லா குடிகளும் சமமேயென ஒப்புக்காவது உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், இனி யாரை எதிர்த்துப் போராடினால் சாதியால் ஒடுக்குண்ட புறயருக்கும் பள்ளருக்கும் பிறருக்கும் விடுதலை கிட்டுமென்பதே ஒரு பெரிய புதிராகவுள்ளது. இந்தி(ய) அரசு அல்லது தமிழக அரசு என்னும் அரசியல் கட்டுமாணமோ பழைய பார்ப்பனியமென்னும் குமுக அமைப்போதான் இக்கீழ்ச்சாதியினரின் நேரடி எதிரியெனச் சொல்ல இயலாத அளவுக்கு, அவற்றின் வழியிலான மேல்சாதி கொடுங்கோன்மையும் ஒடுக்கலும் வெளிப்படையாக இல்லை. இருப்பினும், உருதெரியாத அருவமான வேற்றுமைப் பாராட்டல்களாகவோ மேல் சாதி மேட்டிமையாகவோ இருந்து வருகின்ற மேல்சாதி நலன்கள் கீழ்ச்சாதியினரின் மீது நன்றாகவே கொற்றம் புரிந்து வருகின்றன. இந்த நிலையில், யாரை எதிர்த்துப் போராடி சாதியத்திலிருந்து விடுதலைப் பெறுவதென்னும் கேள்விக்கு விடையாக, 'நம் பகை இதுதான்!' என மூக்கும் முழியும் வைத்து உருவகப்படுத்துவதென்பது மிகப் பெரிய கேள்வியாகும்.

## இதுதான் எதிரி

அரசியல், பொருளியல், வாழ்வியல், பண்பாட் டியல் துறைகளில் புறயரும் பள்ளரும் பிறரும் மிகவும் பின்தங்கிக் கிடப்பதற்கான முதற்பெருங் காரணமே பழைய பார்ப்பனியமென்னும் மாந்தநேய மில்லா வாழ்க்கை நெறியும் அமைப்பும் தானென்பதை இவர்களில் பலர் ஓரளவு புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் தேய்ந்துப் போன பழைய பார்ப்பனியத்தை

வரிந்துக் கட்டிக் கொண்டு எதிர்ப்பது மட்டுமே நிலைமையை மாற்றிவிடாது. சென்ற ஒரு நூற்றாண்டு வரலாறு அய்யந் திரிபற இதைப் புலப்படுத்துகின்றது. வென்ற இத்துணைக் கண்டத்து பல்வேறு தேசிய இனங்களையும் அரசுகளையும் ஒட்டுக்காக வைத்துக் கட்டியாள ஓர் ஆட்சிக் கொள்கையைத் தேடிப் பிடித்த ஆங்கிலேய வந்தேறிகள் செயற்கையாக உருவாக்கிய 'இந்து'க் கொள்கைதான் பழைய பார்ப்பனியத்தின் மறு பிறவியாக வந்துப் பிறந்தது. ஆங்கிலேயர் அடைக்காத்துப் பெற்ற அந்த புதிய பார்ப்பனியக் கொள்கை தான் இன்று அரைக்கால் சட்டை மாட்டிக் கொண்டு வருகின்றது. இப்புதிய பார்ப்பனிய நச்சு வட்டத்திற்குள் புறயரும் பள்ளரும் பிறரும் ஈர்க்கப்பட்டு தங்களை 'இந்து'க்கள் எனச் சொல்லிக் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்! இப்புதிய பார்ப்பனியம் தான் இன்று புறயருக்கும் பள்ளருக்குமாகிய எதிரியாகும். ஒடுக்குண்ட சாதியினருக்கு மட்டுமின்றி ஒடுக்குண்ட தமிழினம் முழுவதற்குமான ஒரு பொதுப் பகையாகும். இந்தி-இந்து வல்லரசியக் கொள்கையின் உயிர்மூச்சாகவும் இருந்துவருவது இந்த புதிய பார்ப்பனியம்தான். செத்துக் கொண்டிருக்கும் பழைய பார்ப்பனியத்திற்குப் புத்துயிரூட்டி வரும் பழவெல்ல (Glucose) ஊட்டமாக இருந்து வருகின்ற இந்தப் புதிய பார்ப்பனியமோ புறயரையும் பள்ளரையும் பிறரையும் கூட தம் பக்கம் மெல்ல ஈர்த்து வருகின்றது.

பழைய பார்ப்பனியத்திற்கு புதிய பொருளையும் புதிய உள்ளீட்டையும் புதிய ஞாயத்தையும் புதிய விளக்கத்தையும் கற்பித்து வருகின்ற புதிய பார்ப்பனியத்தால் வருகின்ற கேட்டைப் பற்றி அப்பழைய பார்ப்பனியத்தை விடாப் பிடியாக எதிர்த்துவருகின்ற திராவிடர் கழகம் போன்ற அமைப்புகளால் சரிவர புரிந்து கொள்ள முடியவில்லை. அவற்றின் குருட்டுத்தனமான

பழைய பார்ப்பனிய எதிர்ப்பென்பது புதிய பார்ப்பனியத் தைதான் வலுப்படுத்தியுள்ளதென்பதே கண்கூடு. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், பிற்பட்ட சாதி யினருக்கும் இடையிலான முரண்பாட்டிற்கு ஒரு தீர்வைக் காணமுடியாத அவற்றினுடைய ஏலாமை இதனால் வந்த விளைவுதான் எனலாம்.

புறயருக்கும் பள்ளருக்கும் பிறருக்குமாகிய பொது வான எதிரி இன்னதுதானென எங்ஙனம்தான் உருவகப் படுத்துவது? 'பாரதம்' என்னும் கட்டமைப்பு இருக்கின்ற வரையில் பார்ப்பனரின் மேட்டிமையும் சாதிகளும் இருக்கத்தான் செய்யுமென அடித்துச் சொல்லி வந்த பெரியார் ஈ. வெ. இராமசாமியின் கூற்றிலடங்கிய அரசியல் உத்தியை விளங்கிக் கொண்டால்தான் அந்த புதிருக்கு விடை காண இயலும். புறயருக்கும் பள்ளருக் கும் பிறருக்குமாகிய பொது எதிரி யாரென்பதை எளிதில் உருவகப்படுத்திட முடியும். சாதியை ஒழிக்க வேண்டு மாயின் 'பாரதக்' கொள்கைக்கு முதலில் பாடை கட்ட வேண்டுமென்பதுதானே அதனுடைய உள்ளீடு? இந்தி-இந்து வல்லரசியக் கொள்கையை உயிர்நாடி யாகக் கொண்ட 'அகன்ற பாரதம்' என்னும் புவியரசியல் கொள்கையும் வல்லரசு அமைப்புமாம் ஒடுக்குண்ட சாதியினருக்கும் கூட பொதுவான எதிரியென்பது தான் முதல்பாடம்.

அனைத்திந்திய சாதியென யாதுமில்லை. பழைய சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் கேட்டுவந்த இடவொதுக்கீடு-சலுகைக் கொள்கை பின்னர் காந்தியத்தின் குமுகியக் கொள்கையாக மருவிய போது தொகுத்த இந்தி(ய) அரசுச் சட்டத்தின் சேர்க் கைப் பட்டியல்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தீண்டப் படாத சாதிகளும் பழங்குடிகளும் கூட இத்துணைக் கண்டம் முழுதளாவிய அரத்த உறவைக் கொண்ட

சாதிகளாக இல்லை. அவை யாவும் வெவ்வேறு தேசிய இனங்களில் அடங்கிய சாதிகளாகும். தமிழகத்தின் புறயர் வேறு; மராட்டியத்தின் மகர்கள் வேறு. தமிழகத்தின் வேளாளர்கள் வேறு; இந்தியின சாட்டுகள் (Jats) வேறு; வடக்கிலுள்ள 'கவுட' பார்ப்பன பிரிவுகள் வேறு. தென்னகத்தின் 'திராவிடப்' பார்ப்பன பிரிவுகள் வேறு. இவற்றை மறந்து, தாழ்த்தப்பட்ட சாதிகளை அனைத்திந்திய மட்டத்தில் தொகுத்ததை வைத்து அனைத்திந்திய மட்டத்தில் 'தலித்' அரசியலை வடித்தெடுக்கப் புறப்படுவதோ 'பாரதம்' என்னும் 'புதிய பார்ப்பனிய அரசு வட்டத்திற்குள்ளும், அதுத் தாங்கி நிற்கின்ற இந்தி-இந்து வல்லரசுக் கொள்கைக்குள்ளும் அடங்கி நிற்பதென்றே பொருள்படும். ஆகவே, முசுலிம்களையும் கிருத்துவர்களையும் சேர்த்துக்கொண்டு இந்தி(ய) அளவில் 'நலிந்தோரெல்லாம் ஒன்றே'யென ஒடுக்குண்ட சாதியினர் முழங்க வேண்டுமென்பது 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!' என்ற முழக்கம் எந்த அளவுக்கு மெய்ப்படவில்லையோ அந்த அளவுக்கு உருப்படாது கசப்பூட்டுவதாயினும் உண்மை இதுதான். புதிய பார்ப்பனியத்திற்கும்—இறுதியில் காவிக் கொடியோரின் 'அகன்ற பாரதக்' கொள்கைக்கும்—முட்டு தாங்குவதில் தான் அம்முழக்கம் சென்று முடியும்.

## செங்கொடிக்கு அஞ்சாதோர் மதமாற்றத்திற்கு அஞ்சுவதேன்?

இந்தி-இந்துக் கொள்கையென்னும் திரையன் (Trojan) குதிரைக்குள் ஒளிந்து வருகின்ற புதிய பார்ப்பனிய நலன்கள் யாவும் பொதுவுடைமைக் கொள்கையைக் கண்டு அஞ்சியதில்லை. ஏனெனில் பொதுவுடமைக் கட்சிகளை 'முற்போக்கு' பார்ப்பனியம், என்றே விழுங்கிச் செரித்து கழித்தும் ஆகிவிட்டது. ஆனால் வலங்கை பார்ப்பனியமாயினும் இடங்கை பார்ப்பனிய

மாயினும் புறயரும் பள்ளரும் பிறரும் மதம் மாறுவதைக் கண்டுதான் அரண்டு வியர்த்து வெலவெலத்து நிற்பதே கண்கூடாகப் பார்க்கின்ற உண்மை. இடவொதுக்கீடு-சலுகை இன்று புறயரையும், பள்ளரையும் பிறரையும் மயக்குறச்செய்யும் புதியவகை அபினி. 'இந்து' மதத்தைக் கட்டிகாக்க வேண்டி அவர்களின் வாயருகில் எட்ட வைத்துக் கட்டப்பட்டுள்ள கொள்ளு முடிச்சு. தொல் தமிழர்கள் பெருமளவில் மதம் மாறு வதைத் தடுக்க வேண்டுமெனில் இடவொதுக்கீடும் சலுகைகளும் இன்றியமையாதவையென அவற்றை எதிர்க்கின்ற பார்ப்பனர்களும் கூட மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தலையெழுத்தென ஏற்றுக் கொள்கின்ற இரங்கத்தக்க நிலையைப் பற்றி சொல்லித் தானா தெரிய வேண்டும்? துணிவிருந்தால் அவர் களுக்குத் தருகின்ற இடவொதுக்கீட்டையும் சலுகை களையும் தில்லி ஆளவந்தார்கள் எடுத்துத்தான் பார்க்கட்டுமே! தமிழரில் தாழ்த்தப்பட்டோர் அப்போது பெருமளவில் மதம் மாறத் தொடங்கிவிடுவர். இதனால் எண்ணிக்கை மட்டில் 'இந்து' மதம் மெல்லச் சாகத் தொடங்கும். இதை அறியாதவர்களா நம்மை ஆள வந்தவர்கள்? மீனாட்சிபுரத்தில் தொல்தமிழர்கள் சிலர் மதம் மாறிவிட்டனரென்றவுடன் இந்தி-இந்து வல்லரசின் செங்கோட்டைக்குள் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டனர். நம்முடைய சென்னைக் கோட்டையும் கூடத்தான் நடுங்கியது. பின்னால் வந்த சனதா கட்சியின் ஆட்சியில் அக்கட்சியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மதமாற்றத்தைத் தடை செய்யச் சொல்லி ஒரு தனியார் சட்ட வரைவையே முன் வைத்தார். சாம்பல் அரக்கன் (பசுமாசுரன்) சிவனிடம் பெற்ற வரம் போன்றதுதானே இந்த மத மாற்றம்? பூதம் போல வானளாவி நிற்கின்ற இந்தி-இந்து வல்லரசுக் கொள்கையின் பெரிய ஓட்டையே (Achilles

heel) இந்த மதமாற்றம் தானென்பதை தமிழினமே உணர வேண்டும்.

அரை நூற்றாண்டு காலத்தில் புறயரிடமும் பள்ளரிடமும் பிறரிடமும் அரசியல் வழியில் ஏற்பட்ட குமுகப் பொருளியல் வளர்ச்சியை விட, பத்தொன்பதாம் நூற்றாண்டு தொட்டு மதமாற்றத்தினால் அவர்களுக்கு வாய்த்த குமுகப் பொருளியல் மாற்றங்களும் ஏற்றங்களும் அளவால் பெரியவை. கண்கூடான இந்த மெய்ம்மையைப் பழஞ்சவை (கத்தோலிக்க)க் கிருத்துவ மதத் தலைமையும் எதிர்ச்சவை (புராட்டெசுடண்ட்) கிருத்துவ மதத்தலைமையும் நினைவுப்படுத்திக் கொள்வது நல்லது. மதம்மாறா புறயரிடமும் பள்ளரிடமும் ஏற்பட்டுள்ள வாழ்வியல் மாற்றங்களும் ஏற்றங்களுமெல்லாம் பொதுவாக உயர்கல்விக் கற்று உயர் பதவிகளை எய்தியதால் வந்தனவாகும். இவ்வாறு வளந்தோரின் எண்ணிக்கையோ ஒப்பீட்டளவில் சிறியது.

ஆனால் இந்தி-இந்து வல்லரசின் சலசலப்புகளுக்கெல்லாம் கூட மிகையாக நடுக்குறும் கிருத்துவ திருச்சவைகள் மத மாற்றம் செய்வதை கைவிட்டு விட்டு சமயச்சார்பற்ற தொண்டு நிறுவனங்களாக சில பத்தாண்டுகளாக இயங்கி வருகின்றன. போதாமைக்கு, கிருத்துவ மதத்தை 'இந்தி(ய)மயமாக்கல்' என்னும் பெயரில் அம்மதத்தைப் புதிய பார்ப்பனிய மயமாக்க (இந்துமயமாக்க) முயன்று வருகின்றன. இந்தியமயமாக்கமென்னும் பெயரில் அறிவுக்கொவ்வா தொல் மதச் சடங்குகள்தாம் குறிப்பாக பழஞ்சவைத் தமிழ்க் கிருத்துவச் சவையில் புகுத்தப்பட்டு வருகின்றன. ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல், திருக்கோவிலில் கும்பமெடுத்தல், தேங்காயுடைத்தல் போன்ற சடங்குகளைப் புகுத்தியுள்ளமையை ஓர் எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். கும்பத்தின் பொருள்

தானென்ன? சிறிது மண்ணைப் பிசைந்துச் சதுரமாகத் தட்டி ஒருதட்டில் வைத்து அந்த மண்ணின் மீது (முகடு மேல்நோக்கிய) மேல்முகடு முக்கோணங் களையும், முகடு கீழ்நோக்கிய கீழ்முகடு முக்கோணங் களையும் வரைவர். மேல்முகடு முக்கோணம் ஆண் குறியை (இலிங்கத்தை)க் குறிக்கும். அதனுடைய எண் மதிப்பு 3. கீழ்முகடு முக்கோணம் பெண்குறியை (அங்குலை)க் குறிக்கும். இதன் எண்மதிப்பு 2. இவ்வி ரண்டும் சேர தொகை மதிப்பு 5 என்பது தந்திரக் கொள்கையின் விளக்கம். பின்னர் அந்த முக்கோணங் களைச் சுற்றி அம்மண்ணில் புற்களைச் செருகுவர். அதன்மீது பெண்ணின் கருப்பையைக் குறிக்கின்ற நீர் நிரப்பிய செம்பைவைத்து, அதன் வாயின்மீது (அவ்வாறே பெண்ணின் கருப்பையைக் குறிக்கின்ற) தேங்காயை வைப்பர். செம்பு வாயில் மகப்பேற்றுச் செழுமையை (Fertility) குறிக்கின்ற மாவிலைகளைச் செருகுவர். இந்தக் கும்பக் குறியீடு முழுவதும் ஆண்பெண் குறிவழிபாட்டைக் (Sex cult) குறிப்பிடுகின்ற சடங்குக்குரியன. காலத்துக் கொவ்வா இத்தகைய குறிவழிபாட்டுச் சடங்குகளைக் கொண்டுவந்து கிருத்துவ மதத்திற்குள் புகுத்துவதுதான் இந்திய மயமாக்கமெனில், இது திருச்சவையின் இறையி யலின் தோல்வியையும் சிதைவையும் வீழ்ச்சியையும் தாம் குறிக்குமென்பதில் அய்யமில்லை. இந்துமயமாக்க மென்பது பார்ப்பனியச் சடங்குமயமாக்கமென்பது இதனால் மெய்ப்படுகின்றது.

கிருத்துவ மதத்திற்கு மாறியவர்களில் மிகப் பெரும் பாலோர் தீண்டாமை, காணாமைக் கொடுமைகளுக்கும் சாதி ஒதுக்கத்திற்கும் ஆட்பட்டுக்கிடந்த பழைய அடிமைச் சாதீயினர்தாமென்பதைத் திருச்சவைகள் மறந்து நிற்கின்றன. இந்த அணியரின் குமுக விடு தலைக்குத் தாங்கள் ஆற்றவேண்டிய கடமையைச் செய்யாது நிற்கின்றன. இந்த நிலையில் எந்தச் சாதிக்

கொடுமையிலிருந்துத் தற்காலிகமாக ஓரளவு மீள்வோமெனக் கருதி கிருத்துவ மதத்திற்கு மாறினார்களோ அந்த ஒடுக்குண்ட பெருங்குடிக்கு ஒருசில மேல்சாதி கிருத்தவர்கள் இழைத்து வருகின்ற இரண்டகம்தான் இந்த 'இந்தியமயமாக்கம்' எனச்சொல்வது மிகையாது. இதன் விளைவாக பெரும்பான்மையரான புறயர், பள்ளர் மதமாறிகளுக்கும், மிகச் சிறுபான்மையரான வேளாளர் போன்ற மேல்சாதி மதமாறிகளுக்கும் இடையிலான முரண்பாட்டைத்தான் தமிழகத்திலுள்ள பழஞ்சவை கிருத்துவர்களிடம் பொதுவாக பார்க்கலாம். தென்னிந்தியத் திருச்சவைகளின் ஆட்சியமைப்புகளில் மதம்மாறிய புறயரும் நாட்டாரும் போன்ற ஒடுக்குண்ட பிரிவினருக்கு இடையே இன்று சாதிக்காழ்ப்புகளும் சாதிவழி அணிவகுப்புகளும் முற்றி வெறுக்கத்தக்க வெளிப்பாடுகளாகத் தலைதூக்கி வருகின்றன.

அய்ரோப்பிய வந்தேறிகள் கி. பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கு கொண்டு வந்து புகுத்திய மதமன்று கிருத்துவ மதம். இயேசு கிருத்துவின் பன்னிரு மாணாக்கர்களில் (சீடர்களில்) ஒருவரான தூயர் தோமா கிருத்துவின் செய்தியை பரப்புவதற்கென்றே கி.பி. 20ம் ஆண்டில் சேரநாட்டிற்கு வந்தார். மலையாளமென்னும் தனிமொழி இன்னும் தோன்றியிராத தமிழ்கூறு நல்லுலகத்தில் அன்று அடங்கியிருந்த சேர நாட்டில், அவர் தமிழைக் கற்று தமிழில்தான் மதப்பரப்பல் செய்திருக்க வேண்டும். பின்னர் கி. பி. 52ம் ஆண்டில் சோழமண்டலக் கரைக்கு வந்து சென்னைப் பரங்கிமலையில்தங்கி சமயப்பணி புரிந்து வந்தபோது, கி. பி. 54ம் ஆண்டில் அவர் பார்ப்பனர்களால் கொல்லப்பட்டார். கிருத்துவச் சமயம் இன்றிலிருந்து 1939 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறு தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த மரபில் தமிழ்த் திருச்சவைகள் தமிழ்மயமாக வேண்டாமா?

பழஞ்சவை, எதிர்ச்சவைக் கிருத்துவ திருச்சவைகளுக்கு இடையிலான பூசலோ சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அய்ரோப்பாவில் நிகழ்ந்த பிளவால் வந்தது. ஆனால் தூயர் தோமா தமிழகத்திற்குக் கொண்டு வந்த கிருத்துவமோ மூலமுதல் கிருத்துவம். இந்நிலையில், பரங்கிமலையிலுள்ள தூயர் தோமாவின் எச்சங்களின் மீது எதிர்ச்சவை கிருத்துவம் உரிமைப் பாராட்டாததே. அது தமிழ் மரபிலிருந்தும், வரலாற்றிலிருந்தும் எவ்வளவு தொலைவுக்கு விலகி நிற்கின்றதென்பதையே காட்டுகின்றது.

விவிலியம் எழுதப்பெற்ற அப்பிரு (எபிரேய) மொழியில் ஈசா என இயேசுவை அழைப்பர். அதையே அரபிய மொழியில் ஈசாயி என்பர். ஈச்சன்-ஈசன் என்னும் தமிழ்ப்பெயரின் திரிபுதான் ஈசாயி. ஆனால் ஈசாவென்னும் அப்பிரு பெயர் ஆங்கிலத்தில் Jesus என்றாக அதைத் தமிழில் ஏசுவென முதலில் மொழியாக்கினர் பின்னர், 'ஏசு'வெனில் 'தூற்று' என்று பொருள் படுவதைக் கருதி அதை இயேசு வெனத் தமிழில் ஆண்டு வருகின்றனர். அதே போல் அவ்வா (Havva) என்பது அப்பிரு மொழியில் ஏவாளைக் குறிக்கும். அஃது அவ்வை என்னும் தமிழ்ப் பெயரின் திரிபுதானாகும். ஆதாம் என்பது ஆதன் (தந்தை) என்னும் தமிழ்ப்பெயரின் திரிபு தானென்பதைப் பாவாணரும் காட்டுகின்றார். இந்த நிலையில், ஆங்கில வழியிலான விவிலியப் பெயர்களைத் தழுவி அவற்றைத் தமிழ்ப்படுத்தி ஆள்வதும் கிருத்துவத்தைத் தமிழ்மயமாக்குவதன் ஒரு சிறிய கூறாக அமையாதோ? வழிப்பாட்டில் 'போற்றி, போற்றி!' என்னும் சொல்லை ஆள்வது தமிழ்மரபு. அதைப் பிற்காலத்தில் 'தோத்திரம்' என்ற சங்கத(சமற்கிருத)ச் சொல்வந்து நீக்கிவிட்டது. தமிழ்க் கிருத்துவர்கள் 'வணக்கம்' என்னும் சொல்லை ஆள்வதும் அந்த வழியில் நிற்காதோ? 'தோத்திரம்' என ஏன்

சொல்ல வேண்டும்? Flesh and body என்னும் ஆங்கிலச் சொல்லைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்து 'மாம்சம்' என்று ஆள்வதேன்? 'மாம்சம்' என்றால் வழக்கில் 'இறைச்சி' என்றுதானே பொருள்படும்? உடல் அல்லது உடம்பு என்னும் சொல்லை ஆண்டால் குறைந்தா விடும்? சங்கதம் மிகையாகக் கலந்த மணிப்பவளத்தைத் தமிழெனக் கொண்ட இடைக்கால நடையையா இன்னும் ஆளவேண்டும்? இவையெல்லாம் தமிழ்க் கிருத்துவர்கள் தமிழ் மரபில் வேரூன்றா ஒட்டுண்ணி நிலையைத்தாமே காட்டுகின்றன.

மேற்சொன்ன கருத்துகளையும் திறனாய்வுகளையும் கிருத்துவ மதத்தலைமைகள் ஏற்க மறுக்கலாம். தமிழகத்தில் வளர்ந்து நிலைத்துவிட்ட கிருத்துவத் தலைமையினரிடம் தமிழ் தேசிய ஓர்மையும் தமிழ்த் தேசிய பற்றுக்கோடுகளும் தமிழ் மொழியுணர்வும் தமிழின உணர்வும் இல்லாமையே இத்தகைய போக்குகள் அவர்களிடம் காணப்படுவதற்கான அடிப்படைக் காரணம்.

## தமிழின மரபு வேண்டாமா ?

உள்ளீட்டில் இசுரவேலரின் தேசிய இலக்கியமாக விருந்து, பின்னர் அவர்களின் சமய இலக்கியமாகி, அடுத்து உலகளாவிய கிருத்துவ மறையானதுதானே விவிலிய நூல்? எகிப்திய நாட்டில் அடிமையுண்டு கிடந்த அப்பிரு (Apiru அல்லது Hebrew) மொழியைப் பேசி வந்த செமித்திய இனப் பழங்குடிகளையெல்லாம் ஒன்றுதிரட்டி எகிப்தியரின் அடிமைத்தளைகளிலிருந்து மீட்டு (கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் பாலும் தேனும் ஓட வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படும்) "பொன்னுலகை" நோக்கி மோசே அழைத்துச் சென்றார் என்பது

விவிலியத்தின் பழைய ஏற்பாடு முழுவதிலும் அடங்கிய கருச்செய்தி. எண்ணங்கள் ஈடேறி தொல்லைகள் ஓய்கின்ற 'புத்துலகு' இதுதானென யூதர்களின் தெய்வ மாகிய யாவே (எகோவோ) இசுரவேலரின் தலைமகனான ஆபிரகாமுக்கும் அவனுடைய வழிவந்தோருக்கும் காட்டிய கானன்தேய மென்னும் பகுதிதான் மோசே இசுரவேலப் பழங்குடிகளை அழைத்துச் சென்று காட்டிய 'பொன்னுலகு.' பன்னிரு பழங்குடிகளாகப் பிரிந்து, தங்களுக்குள் போரிட்டுக் கொண்டும் எகிப்தியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த இசுரவேலர்கள் பின்னால் காலத்தால் ஒரு தேசிய இனமாகத் திரண்டு தங்களுடைய விடுதலையை வென்றெடுத்த தென்னும் வரலாறுதானே பழைய ஏற்பாட்டின் அடிப்படை விளக்கமாக இருந்து வருகின்றது?

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலும் கூட யூதத் தேசிய இன விடுதலை உணர்வு மரபுதான் தொடர்கின்றது. இசுரவேலர்களின் தேசம் உரோமானிய வல்லரசிடம் அடிமையுண்டு கிடந்ததுதான் அப்புதிய ஏற்பாட்டினுடைய வரலாற்றுப் பின்னணி. பரிசேயரும்பிறரும் இயேசுவை உரோமானிய ஆளுநரான பொந்தியு பிலாத்தின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி, அவர் தன்னை யூதர்களின் மன்னனெனச் சொல்லிக் கொள்வதுடன் (உரோமானிய பேரரசான) சீசருக்கு வரிகட்ட வேண்டாமெனக் கூறி யூத மக்களிடம் கலகத்தைத் தூண்டுவதாகத்தானே குற்றச் சாட்டினர்? (லூக்கா 23:1). இயேசுவிருந்த கலிலியா நாட்டை ஆண்டு வந்த ஏரோது மன்னனை உரோமப் பேரரசின் கீழடங்கிய கால் அரையன் (tetrarch) என்று தானே குறிப்பிட்டனர்? இதனால் யூத மதத்திற்குள் சீர்திருத்தங்களை விழைந்தது போக, உரோமானிய வல்லரசு எதிர்ப்பை உணர்த்துகின்ற தேசிய விடுதலை உணர்வுதான் இயேசுவை யூதர்களின் தலைமகனாக

வடித்ததென்பதுதானே புதிய ஏற்பாட்டின் உள்ளீடும் ஆகும்?

விவிலிய நூலின் இந்த அடிப்படை கருத்தைத் தமிழகத்திலுள்ள பழஞ்சவை, எதிர்ச்சவை மதத் தலைவர்கள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு விளங்கிக்கொண்டிருந்தால் 'முழுமுதற்கடவுள்' எனப்பட்ட யாவே உணர்த்திய அடிப்படை தேசிய இன விடுதலை வேட்கையும் இவர்களிடம் ஊன்றி ஆல் போல் தழைத்திருக்கும். அன்று எகிப்தியரிடமோ உரோமானியரிடமோ அடிமையுண்டு அல்லல்பட்டு ஆற்றாது தங்களுக்குள் கூறுண்டு புலம்பிய வண்ணம் கிடந்த இசுரவேலரைப் போன்றே, இன்று இந்தி - இந்து வல்லரசிடம் அடிமையுண்டுக் கிடக்கின்ற தொல்குடியினராகிய தமிழ் மக்களை மீட்பதுதான் தமிழ்ச் சூழலில் விவிலிய நூல் காட்டுகின்ற பெருவிளக்கம் — திருச் செய்தி—என்று அறிவதில்தான் அது முடிந்திருக்கும். ஆபிரகாமுக்கு யாவே காட்டிய பொன்னுலகை நோக்கித் தம் இனத்தாரை மீட்டு அழைத்துச் சென்ற மோசேயின் திரு ஆவி தமிழகத்துத் திருச்சவைகளுக்கு வெளிச்சமாகி, அடிமைத் தளையறுத்தத் தமிழ்மண் இதோவென ஒரு பொன்னுலகைக் காட்டித் தமிழினத்தை ஆற்றுப் படுத்தியிருக்கலாம். இத்தகைய விளக்கத்தைப் பெற்று, தமிழ்த் தேசியத் தன்மையையும் நல்ல தமிழ் மரபுகளையும் தம் வயமாக்கிக் கொள்ள வல்ல புதிய கிருத்துவத் திருச்சவைகளாக அவை மலர்ந்திருக்கலாம். மேலை முதலாளிய வல்லரசுகளை நம்பியோ மேலைப் பண்பாட்டில் போலியாகப் புதையுண்டோ கிடக்காமல், தமிழ்த் தேசிய பண்பாட்டில் வேரூன்றி அவை ஆல் போல் தழைக்கலாமன்றோ?

ஆனால், மாக்சுமுல்லர், மானியர் வில்லியம்சு போன்ற அய்ரோப்பியர்கள் பொய்யாகக் கற்பித்துச்

சொல்லி பார்ப்பனியம் மீள்வதற்கு வழிச்செய்த 'இந்து' மதத்தை அடியொற்றிய இந்தி(ய)க் கொள்கையில்தானே தமிழ்க் கிருத்துவத் தலைமைகள் முற்றிலும் புதைந்து கிடக்கின்றன? 'இந்து' மதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தி(ய)த் தேசியத்திற்கு உரம் சேர்க்கப் பார்ப்பதுதான் தமிழகத் திருச்சவைகளின் போக்காக இருந்து வருகின்றது. தமிழ்நாட்டுக் கிருத்துவத் தலைமைகளுக்குத் தமிழ் மொழியின் மீது பற்றில்லை; தமிழின ஓர்மையும் இல்லை. தமிழ் மண்ணிலும் மரபிலும் கிருத்துவ சமய நெறியை ஒன்றிடச் செய்யாமல் 'இந்து'க் கொள்கையைத் தழுவிய இந்தி(ய)ப் பண்பாட்டுடன் அவையாவும் ஒன்றிப் போகின்றன. தமிழைப் புறக்கணித்துத் தமிழை மறந்து வருகின்ற புதிய சட்டைக் காரர்களின் கொத்துகளைப் போல போலியாக நடித்துக் கெடுக்கின்ற கிருத்துவச் சவையோரைத்தாம் உருவாக்கி வருகின்றன. ஆபிரகாமும் மோசேயும் உருவகப் படுத்திய தேசிய விடுதலை நெறிக்கு நேரெதிராகச் செயல்பட்டு தாங்கள் செய்வதென்ன வென்று அறியாதவராகப் பொய் மானைத் தேடித் திரிகின்றன.

வீரமாமுனிவரும் ஜி.யூ. போப்பும் கால்டு வெல்டும் போன்ற அய்ரோப்பிய கிருத்துவச் சமயப்பரப்புநர்கள் தமிழ்க்கற்று தமிழ்மேல் காதலுற்று தமிழ்ப் பழகி தமிழை வளர்த்தது மட்டுமன்றி தமிழுக்கே புத்துயிரூட்டினர். இவர்களில்லாமல் போயிருந்தால், தமிழென்பது ஓர் உயர் தனிச் செம்மொழியென்னும் உண்மை உலகத் திற்குத் தெரியவந்திருக்காது. பார்ப்பனியத்தால் அந்த முதன்மொழி முற்றாக மறைக்கப்பட்டிருக்கும். தமிழின் இக்கால மீட்பர்கள் அவர்கள்தாமெனச் சொல்வது மிகையாகாது. ஆனால், தமிழராகப் பிறந்துவிட்ட தமிழ்க் கிருத்துவர்களோ பொதுவாக தமிழின் மீதும் தமிழினத்தின் மீதும் யாதொரு பற்றும் அற்றவர்களாகத்

தமிழைக் கெடுக்கவும் தமிழை மறக்கவும் செய்கின்ற வகையில் தமிழுக்கே காலனாக தெரிந்தோ தெரியாமலோ இருந்து வருகின்றனர். தாய்மொழிக் கற்பதை மறக்கடிக்கும் ஆங்கிலக் கல்வியின் மீது அயராத காமம் ஒரு கொள்ளைநோயெனத் தமிழர்களிடையே பெருகவும் தமிழ்த் தெரியா தமிழ்த் தலைமுறைகள் தலையெடுக்கவும் கிருத்துவத் திருச்சவைகளின் கீழடங்கிய திருப்பள்ளிகள் (Convent) ஒரு பெரிய காரணமாக இருந்துவந்துள்ளன. இதனால் புதிய கருப்பு 'வெள்ளைக்காரர்கள்' தாம் உருவாக்கப்பட்டு வருகின்றனர். இவை யாவும் விவிலியத்தின் உள்ளீட்டிற்கும் அடிப்படைக்கும் நேரெதிரானவை. கிருத்துவத்தை இந்துமயக்குவதை விடுத்துத் தமிழ்மயமாக்குவதுதான் இந்தப் பிறழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி நெறிப்படுத்தும்.

புறயரையும் பள்ளரையும் நாட்டாரையும் மீனவரையும் பெரும்பாலோராகக் கொண்டுள்ள தமிழகத் திருச்சவைகள் காலம் தாழ்த்தியாவது சாதியொழிப்பில் ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளது ஒரு நல்ல திருப்பம். ஆனால், 'பாரத'மென்னும் இந்தி—இந்து வல்லரசிய புவியியல் வரம்பிற்குள் அடங்கி நிற்கின்ற எவராலும் சாதியத்தை ஒழித்துவிட முடியாது. அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதைப் போன்றது. சாதியொழிப்பில் ஆர்வம் காட்டுகின்ற சில திருச்சவை வட்டங்கள் அம்பேத்கரியத்தை விடுதலைக்கான ஒரு வழியாகக் கருதத் தொடங்கியுள்ளது ஒரு புதிய போங்காக தலையெடுத்துள்ளது.

## இதனால் 'இந்து'க் கொள்கைக்குக் கேடு இல்லை!

அம்பேத்கரியத்தின் உத்திகளும் உள்ளீடுகளும்தாம் என்னவெனப் பார்த்தால், இடவொதுக்

கீட்டையும் சலுகைகளையும் கருவியாகக் கொண்ட ஆமை வேக மாற்றக் கொள்கைதான் அதனுடைய முதற்பெரும் உத்தியாகவுள்ளதைக் காணலாம். என்றுமே இல்லாமல் இன்று புதிதாக ஒட்டப்படுகின்ற 'இந்து' என்னும் பட்டத்தைத் தாழ்த்தப்பட்டோர் உதறியெறிந்துவிட்டு பல்லில்லாத புத்த மதத்தில் சேர்ந்து கொள்வதென்பதுதான் அதனுடைய இரண்டாவது பெரிய உத்தி.

இத் துணைக்கண்டம் முழுவதையும் எடுத்துக் கொண்டாலும், புத்த மதத்திற்கு மாறுவதென்னும் உத்தியின் வழியில் மிகச் சிறிய அளவிலேயே—அதிலும் குறிப்பாக மராட்டியத்தில்—(அதுவும் ஒரு சில இலக்கங்களென ஓரிரு நேரங்களில் மட்டும்) தாழ்த்தப்பட்ட சாதியினர் அவ்வாறு அம்மதத்திற்கு மாறியுள்ளனர். இடவொதுக்கீடும் சலுகைகளும் என்னும் கொள்ளு முடிச்சு தாழ்த்தப்பட்டோரின் வாய்க்கு முன்னால் கட்டிவிடப்பட்டிருக்கின்ற வரையில் 'இந்துமதம்' என்னும் புதிய பார்ப்பனியத்தால் என்றோ தம்வயமாக்கிச் செரித்து ஏப்பம் விடப்பட்டு விட்ட புத்த மதத்திற்கு பெரிய எண்ணிக்கையில் அவர்கள் தொடர்ந்து மாறுவதென்பது ஏறக்குறைய இல்லையென்றே சொல்லலாம். இடவொதுக்கீடும் சலுகைகளும்தான் ஒதுக்குண்ட சாதியினர் பெருமளவில் கிருத்துவத்திற்கோ இசுலாமியத்திற்கோ மாறுவதைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கின்ற வேலித்தடுப்பாக இருப்பதை வைத்துப் பார்த்தால், இந்தி-இந்து வல்லரசிய ஆட்சியும் அமைப்பும் அம்பேத்கரியத்தினால் குடி முழுகிப் போய்விடா. யாதொரு குமுகப் புரட்சியும் அதனால் வந்துவிடப் போவதில்லை. இதுபோக, அம்பேத்கரியத்தின் புவியியல் வரம்பும் வாய்ப்பும் ஒட்டுக்காக ஒன்றான 'பாரதம்' என்னும் எல்லைதானென்பதனால் காவிக் கொடியோரின் 'அகன்ற பாரதக்' கொள்கையினுடைய மறுபக்கமாகத்தான் அஃது

இருந்து வருகின்றது. அம்பேத்கார்தான் இக்கால 'மனு' வென ஆண்டைச் சாதிகள் பாடம் படிப்பதும் சிலை வடிப்பதும் கூட இங்கு உற்று நோக்கத்தக்கது.

இந்தி(ய) ஆண்டைகள் காந்தியைக் காட்டி நாற்பது ஆண்டுகளுக்கு மேல் மக்களை ஏய்த்தாகி விட்டது. அந்த காந்தியைக் காட்டி இனியும் ஏமாற்ற முடியாதென உணர்ந்து கொண்டு விட்ட ஆண்டைகள், அம்பேத் ரைக் காட்டி இன்னுமொரு நாற்பது ஆண்டுகளுக்குச் சுரண்டலாமெனக் கணக்கிட்டுள்ளது நன்றாகவே தெரிகின்றது.

இந்த நிலையில் தொல்தமிழருக்கு மதமாற்றத் தினால் வந்த நன்மைகளையும், அம்பேத்கரியத் தினால் வந்த பயன்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், கிருத்துவ மதத்திற்கு மாறியதனால் வந்த பயன்களின் அளவீடுகளும் அழுத்தங்களும்தாம் பெரிதாக உள்ளன. அதாவது, மதமாற்றத்தினால் தொல்தமிழருக்கு விளைந்த பயன்கள் அம்பேத்கரியத் தினால் வந்த அரசியல் மாற்றங்களையும் விஞ்சி நிற்கின்றன. பொருளியல் மாற்றங்கள் மட்டுமன்றி அவர்களுக்கு ஓர் அழுத்தமான மாற்றுப் பண்பாட்டு மாதிரியையும் மதமாற்றம் வடித்துத் தந்துள்ளது. போலித்தனமான புதிய பார்ப்பனிய மயக்கங்களுக்கும் போக்குகளுக்கும் ஆட்பட வேண்டிய தேவையோ மதமாறிகளிடம் மிகக் குறைவு.

கிருத்துவ விடையூழியங்களால் வந்த உருப்படி யான வரலாற்று விளைவுகளையும் அமைப்புகளையும் முகமைகளையும் வலுப்படுத்திக் கொள்ளாமல் அம்பேத் கரியமென்னும் புதிய மேய்ச்சல் நிலத்தைத் தேடப் புறப்படுவது இருப்பதைவிட்டு பறப்பதைப் பிடிக்கப் போவதைப் போலுள்ளது. திருச்சவைகளுக்குள் சாதி

உணர்வும், சாதி அரசியலும் பெருகிவிட்டதென்னவோ உண்மை. மேல்சாதி கிருத்துவர்கள் எண்ணிக்கையில் சிலராயினும், திருச்சவைகளின் அமைப்புகளின் மீது மேட்டிமைப் பாராட்டிக் கொண்டு அவற்றின் தலைமை களில் அழுந்தக் குந்திக் கொண்டிருப்பதும் மெய்தான். அன்று தீண்டாமைக் கொடுமையைப் பட்டுப்பார்த் தோரின் வழி தோன்றல்களுக்கும் காணாமைக் கொடுமை யைப் பட்டறிந்தோரின் பிறங்கடைகளுக்கும் இடையில் நிலவி வருகின்ற உட்பூசலின் புகைச்சல்தான் அம்பேத் கரைப் புதிய மீட்பராக பார்க்கத் துடிக்கின்ற முயற்சிக்கு அடியெடுத்துக் கொடுப்பதாகத் தோன்றுகின்றது. இந்த அகமுரண்பாட்டைத் திருச்சவைகளின் வரம்புகளுக் குள்ளிருந்தே பேசித் தீர்த்துக் கொள்ளமுடியும். ஆனால், இந்த பூசல் பொய்மானைத் தேடுகின்ற ஒரு படலத்தை எழுதத் தொடங்கினால் யாருக்குத்தான் நன்மை வரும்? இந்தி-இந்து கொள்கைக்குத் தானே அது கைக் கொடுக்கும்?

கிருத்துவத் திருச்சவைகளுக்குள் சாதிக் காழ்ப்புகள் சலிப்பூட்டும் வகையில் பெருத்துள்ளது. அம்மதம் இந்தி(ய) மயமாவதென்னும் பெயரில் 'இந்து' மயமாகி வருவதனால் வந்த பக்கவிளைவு. இதுபோக, சாதி அடிப்படையிலான புறச் சூழலின் அழுத்தங்களிலிருந்து திருச்சவைகள் எங்ஙனம் தப்பிக்க முடியும்? தமிழகத்தின் திருச்சவைகளிலெல்லாம் தொல்தமிழர்தாம் மிகப் பெரும்பான்மையராக இருந்தும், அவற்றிலும் அவற்றைச் சார்ந்த பொருளியல் பிடிப்புகளெல்லாம் மிகச் சிறு பான்மையரான மேல்சாதி மதமாறிகளிடம் இருந்து வரு வதுதான் கண்கூடு. இந்த மேல்சாதிச் சிறுபான்மையரின் தன்னல மேட்டிமையைத் தூக்கியெறிய ஏலாத கீழ்ச்சாதி பெரும்பான்மையரின் சிலர்தாம் அம்பேத்கரை நோக்கி நடைக்கட்டுகின்ற வழியறியா போக்கை மேற்கொள்ளப் பார்க்கின்றோம். தென்னிந்திய திருச்சவைக்குள் புகைந்து

கொண்டிருக்கின்ற புறயர் X நாட்டார் பூசலுக்கோ பழஞ்சவை கிருத்துவத்தில் இருந்துவரும் வேளாளர் X பிற கீழ்ச்சாதி மதமாறிகளுக்கு இடையிலான பூசலுக்கோ பேசித் தீர்வுக் காணப் போயின் வரும் தடைகளும் தெரிகின்றன. நாட்டார் கிருத்துவர்கள் தங்களின் இக்கால பணவலிமையை வைத்துத் தனித் தகுதி பெறப் பார்ப்பதும், கூடுதலாக சாதியுணர்வு பாராட்டுவதும் கண்ணுக்குப் புலப்படுகின்றன. புறயர் களில் கிருத்துவர்களும் அவர்களைப் போன்றே பொருள் வலிமையையும் பொருளியல் மேட்டிமையையும் விரைந்து பெறாமல் இந்தப் பூசலில் ஒரு பெரிய திருப்பத்தைக் கண்டுவிட முடியாது. அம்பேத்கரை நோக்கி நடைக் கட்டினால் இதற்குத் தீர்வு வந்துவிடுமோ? திருச்சவை அமைப்புகளின் மீதும் தொண்டு நிறுவனங்களின் மீதும் தங்களுடைய பிடிப்புகளைத் தொல்தமிழர் வலுப்படுத் திக்கொள்வதும் காலப்போக்கில் நல்லது. வணிகத்தில் புகுந்ததுதானே நாட்டார்களுக்குக் கைக்கொடுத்தது? மதமாறிய புறயரும் பள்ளரும் கூட சிறிய நடுத்தர வணிகத்தில் ஈடுபடுவது இந்தப் போக்கில் ஓர் இயல்பு மாற்றத்தைத் தோற்றுவிக்கலாமன்றோ?

## தொல்தமிழரையெல்லாம் மதம் மாற்ற வேண்டும்.

சாதியொழிப்பைத் தம்முடைய தலையாயப் பணி களில் ஒன்றாக திருச்சவைகள் கொள்ள வேண்டு மெனக் கருதுகின்ற கிருத்துவ இறையியல் வட்டங்கள், ஒடுக்குண்டோரின் அடிமைத்தனத்தை ஒளித்து வைத்துத் தொடர பார்க்கின்ற 'இந்து' நலன்களை அவற்றினுடைய உயிர்நாடியிலேயே தாக்குவது நல்லது. மதமாற்றத்தைப் பற்றிய அச்சம்தான் 'இந்து' நலன்களின் உயிர் நடுவ மெனின், ஒளித்தோ ஒளியாமலோ நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மதமாற்றத்தைத் தொடர்கின்ற துணி

வும் உறுதியும் திருச்சவைகளுக்கு மீண்டும் வருவது நல்லது. இந்துவெறி அமைப்புகள் ஒருபுறம் இருக்க, உதட்டளவில் மதச்சார்பின்மையைப் பற்றி வாய்கிழிய பேசி வருகின்ற இந்தி(ய) வல்லரசு அப்போது தலையிட்டு இத்தகைய மதமாற்றத்தைத் தடுக்கப் பார்க்கும். சட்டத்தின் வழியிலான நடவடிக்கைகளை எடுப்பது போக, சட்டத்திற்குப் புறம்பான செயல்களிலும் இறங்கும். அயல்நாட்டுச் சமய நிறுவனங்கள் கொடுத்து வருகின்ற பண உதவியை நிறுத்தவும் முற்படும். இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுப்பதுதான் மதமாற்றத்தின் வாயிலாக ஒடுக்குண்ட சாதியினருக்கு விளையும் பயன்களை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

தொல்தமிழரையெல்லாம் மதம் மாற்றிவிட்டால் சாதிகள் ஒழிந்துவிடுமோவென்பதும் ஒரு கேள்வி. பிறப்பு வழியில் மக்களை ஏற்றத்தாழ்வான சாதிகளாகவும் வரணங்களாகவும் பிரித்த பார்ப்பனியம் இன்று புதிய பார்ப்பனியமாக புத்துயிர் பெற்று நிற்கின்ற சூழலில், அந்த புதிய பார்ப்பனியத்தின் அடிக்காலையே ஆட்டம் காணச் செய்து, ஓரிரண்டு தலைமுறைகளுக்குள் அது கெட்டுக் குலைவதற்கான முன்னிலையை மத மாற்றத்தினால் தோற்றுவிக்க முடியும். அதோடு பன்னூறு ஆண்டுகளாக விளங்கி வந்த சாதியமுறையை உடனே ஒழித்துக் கட்டிவிடவும் முடியாது. இடவொதுக்கீடு–சலுகை வழியாக இதே போன்ற மாற்றத்தை எய்தமுடியாதாவெனக் கேட்கப்படலாம். ஆனால் இந்த வழியில், புதிய பார்ப்பனியம்தான் ஓங்குகின்றதேயொழிய, அது விரைந்துசாகின்ற போங்கு தென்படவில்லை. இதனால் சாதிப்பகுப்பினைகளைத் தழுவிய வாழ்வியல் குலைவதற்கான முன்னிலைகளை வலுப்படுத்துவதாகத்தாம் நம்முடைய ஆள்வினைகள் இருக்க வேண்டும். இந்த வகையில், மதமாற்றமே நல்லதோர் இடைக்கால உத்தி.

கடவுளை நம்பாதோரா மதமாற்றத்தை விழைவதென சிலர் வியக்கலாம். தொல்தமிழர்கள இசுலாமிய மதத்திற்கு மாறுவதை ஒருகால் பெரியாரும் ஆதரித்ததுண்டு. மாற்றாரின் படையெடுப்புகளாலும் மண் கவர்புகளாலும் சொந்தத் தமிழ் நாட்டிலேயே ஏதிலிகளாகவும் அடிமைகளாகவும் கிடக்கின்ற தமிழர்களில் தாழ்த்தப்பட்டோர் மதம் மாறுகையில் வேறெப்போதுமில்லாத அளவில் வேகமான ஒரு நல்ல பண்பாட்டு மாற்றத்திற்கு ஆளாவது கண்கூடு. இந்த வகையாலும் தொல்தமிழ்ப் பெருங்குடிக்கு நன்மையுண்டெனின் அது நல்லதுதானே யென்னும் நிலைதாம் மதமாற்றத்தை ஆதரிக்கத் தூண்டுகிறது. புறயரில் மதமாறா சிலர் இன்று மருத்துவராகவும் பொறிஞராகவும் வளர்ந்து வந்திருந்தாலும், அவர்களுடைய பண்பாட்டு நிலையோ பத்தாவது படித்த மதமாறிகளின் பண்பாட்டு மட்டத்திற்கு இல்லையென்பதை சிலவிடங்களில் பார்க்கின்றோம். மதமாற்றத்தின் வழியாக இத்தொல்தமிழருக்கு ஒரு பண்பாட்டு உயர்ச்சி விளையுமெனில், நடைமுறையைக் கருதி அதை வரவேற்பதில் தவறொன்றுமில்லை.

ஒடுக்குண்டோரின் 'நெஞ்சமில்லா உலகின் நெஞ்சமாகவும் ஆன்மா இல்லாத சூழலின் ஆன்மாகவும் ஓய்ந்து குந்துகையில் துன்பச் சுமையை இறக்குகின்ற பெருமூச்சாகவும் கவலையை மறக்கடிக்கின்ற மயக்க மருந்தாகவும்' பேதை மக்களுக்கு மதம் இருக்கின்ற வரையில், அதனுடைய வாழ்வியல் சிறப்பும் தேவையும் செத்துவிடாது. தள்ளாத அகவையிலும் கூட பட்டித் தொட்டியெல்லாம் அலைந்து "நாம் தமிழர்கள், இந்துக்கள் அல்லர்" என அறிவுரைத்த ஈரோட்டுக் கிழவரின் கருத்துரை செவிடன் காதில் ஊதிய சங்காகப் போன நிலையில், (முழு விடுதலையைப் பயக்காதெனினும்) மதமாற்றமென்பது புறயர், பள்ளர் போன்றோரின் வளர்ச்சிக்கான ஒரு படிக்கட்டுதானேயன்றி வேறில்லை

யெனக் கருதுவதில் தவறுண்டோ? புதிய பார்ப்பனிய மென்னும் நச்சு வட்டத்திற்குள்ளிருந்து மீட்கவும் அதன் வழியிலான 'அகன்ற பாரத'மென்னும் மாயை அகலவும் தொல்தமிழரையெல்லாம் மதமாற்றினால் தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமாக நல்லதுதானே?

அயர்லாந்து, இலெபனான், ஈராக் போன்ற நாடுகளில் ஒரே தேசிய இனங்களுக்குள்ளிருக்கும் மதப்பிரிவுகளுக்கு இடையிலோ, மதங்களுக்கு இடையிலோ நிலவி வரும் பூசல்கள் தீரா சிக்கல்களாக இருந்து வருவதைக் காட்டி, அதேபோல் மதம்மாறிய தமிழர்களெல்லாம் பழஞ்சவை கிருத்துவர்களென்றும் எதிர்ச்சவை கிருத்துவர்களென்றும் இலங்கை பெந்தகோசுத்துச் சவை கிருத்துவர்களென்றும் இசுலாமியரென்றும் மதத்தால் பிரிந்து நின்றால், தமிழின ஒற்றுமையை எவ்வாறு கட்டியமைக்க முடியுமென்பதும் கேள்வி. தமிழ் வழிக் கல்வியைக் கட்டாயமாக்குவது ஒருபுறமென்றும், மங்காதத் தமிழுணர்வும் ஆழவோடிய தமிழ் இன உணர்வும் நின்று நிலைக்குமாறு செய்வது மறுபுற மென்றும் அமைந்தால் மத உணர்வுகளை வீட்டோடு முடங்கச் செய்து இன உணர்வு கோலோச்ச முடியும்.

## நிலையான தீர்வு வேண்டின்...

தமிழ்த் தேசியஇன ஓர்மையை வளர்ப்பதன் வாயிலாக சாதியொழிப்பில் மதமாற்றத்தைவிட நல்ல செறிவான பயனைப் பெற முடியும். மதமாற்றம் இடைக்கால் துயர்துடைப்பு என்றாயின் தமிழ்த் தேசிய இன ஓர்மையோ நிலையான தீர்வாக இருக்க இயலும். தமிழகத்திலுள்ள பழஞ்சவை, எதிர்ச்சவை கிருத்துவ அணிகளெல்லாம் தமிழ்ப் பண்பாட்டு வேரில்லாமல் ஒட்டுண்ணி போல் இருக்கின்ற நிலையை ஒழித்துத் தமிழ்த்தன்மையை பெறுமாயின், தமிழ்த்தேசிய இன

விடுதலைக்கு மட்டுமின்றி, சாதியொழிப்பிற்கும் பேருதவியாக இருக்கும். பட்டப் படிப்பை முடிக்கின்ற கிருத்துவ (குறிப்பாக, தென்னிந்திய திருச்சவையின்) இளைஞர்களின் எண்ணிக்கையும் தேய்ந்து வருகையில், அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு மறுபுறம் மறுக்கப்பட்டு வருகின்றது. இதனால் அவர்கள் உதிரிகளாகக் (lumpen) கெட்டுத்திசை தெரியாது திரிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைத் தமிழ்த் தேசிய இன விடுதலையின் பால் ஆற்றுப்படுத்துவது அவர்களை நெறிப்படுத்தும். தமிழ்த் தேசிய விடுதலைக்குப் போராட வல்ல தலைமக்களை கிருத்துவ குமுகம் வடித்துத் தந்தால் தமிழினத்தின் விடுதலைக்கு பேருதவியாக இருக்கும். கிருத்துவ இளைஞர்களும் நெறிப்படுவர்.

தொல்தமிழர் வடித்த தொன்மொழிதான் தமிழ் மொழி. இதனால் தானே தெலுங்கர்களாகிய காஞ்சி காமகோடிகள் தமிழை 'நீசமொழி' என இழித்துரைக்கின்றனர்? அம்மொழியையும் அதன் வழியாக வந்த நெடிய பண்பாட்டுக் கூறுகளையும் பேணிக் காக்க வேண்டியது ஒடுக்குண்ட தொல்தமிழர்களின் மாபெரும் கடனாகும். இதைக் கிருத்துவ இளைஞர்களிடம் புகட்டி மொழியுணர்வையும் இனவுணர்வையும் போர்க்குணங்களாக்கச் செய்ய இயலும். போலந்து நாட்டினத்தாரிடையே ஓரிரு நூற்றாண்டுகளாகப் புதைந்து கிடந்த உருசிய வல்லரசு எதிர்ப்பையும் அதன் வழியிலான இன ஓர்மையையும் தேசியத் தனித் தன்மையையும் தேசியப் பண்பாட்டையும் கட்டிக் காத்த போலந்து நாட்டு பழஞ்சவை கிருத்துவத் திருச்சவைக்கு நிகராக தமிழ்த் தேசிய இன ஓர்மையின் திருக்குடிலாகத் தமிழகத்தின் கிருத்துவப் பழஞ்சவை, எதிர்ச்சவை திருச்சவைகளை உருவாக்க முடியும்.

'மதச்சார்பின்மை' யென்னும் பொய்முகம் காட்டி வருகின்ற 'இந்தி-இந்து' வல்லரசின் கெடுபிடிகளுக்கு

அஞ்சி, மதச்சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங் களை நிறுவி குமுகத் தொண்டாற்ற முனைந்துள்ள திருச்சவையின் ஒரு சிறிய பகுதியினர், மார்க்சிய விளக்கங்களுக்கும் அரசியலுக்கும் ஆட்பட்டுள்ளனர். மார்க்கிய மாந்தநேயத்தின் வேர்கள் தொல்கிருத்துவத் தில்தாம் (Primitive Christianity) உண்டென்பதனால் கிருத்துவ இளைஞர்கள் அதனால் எளிதாக ஈர்க்கப்படு கின்ற அறிவு, உளவியல் சூழல்கள் விளங்குகின்றன. தமிழ்ப் பண்பாட்டிலும் மரபிலும் வேரில்லாத ஆரியப் பார்ப்பனியச் சார்பு இயக்கமாகக் கெட்டழிந்த தமிழகப் பொதுவுடைமைக் கட்சிகளின் ஒட்டுண்ணி இலக்கணங் களைப் பார்க்கையில், இந்த கிருத்துவ மார்க்சிய வட்டங் களும் அவர்களைப் போன்றே தமிழ்ச் சூழலையும் தமிழ் மரபுகளையும் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. கிருத்துவத் திருச்சவைகளில் எந்த அளவுக்கு சாதிக் காழ்ப்புகள் புரையோடிக் கிடக்கின்றனவோ அதே அளவுக்கு தமிழகப் பொதுவுடைமைக் கட்சிகளிலும் 'புரட்சி' களிடத்திலும் கூட சாதி புரையோடியே இருக் கின்றது. மலையாள நாட்டிலும் மேற்கு வங்கத்திலும் மார்க்சியத்தினுடைய தாக்கங்கள் மலையாள, வங்கத் தேசிய இன ஓர்மைகளையும் நலன்களையும் வலுப் படுத்தி அந்தந்த தேசிய மரபுகளை ஆக்கமுறையில் வளர்த்துள்ளன. ஆனால் தமிழகத்துப் பொதுவுடைமை யரோ அவற்றிற்கு நேர்மாறாகத் தமிழ் மொழியையும் தமிழினத்தையும் காட்டிக் கொடுப்பதையே தலைமேல் கொண்ட கடமையாகக் கருதிச் செயல்பட்டு இந்தி-இந்து வல்லரசியத்தினுடைய அய்ந்தாம் படையாக அயராது செயல்பட்டு வருகின்ற மரபு யாருக்கும் எந்த நன்மையும் பயக்காது.

இதுபோக, கிழக்கு அய்ரோப்பியாவிலும் சோவியத் ஒன்றியத்திலும் சீனத்திலும் அண்மையில் நிகழ்ந்துள்ள

தலைகீழ் மாற்றங்களைக் கண்டு தமிழகப் பொது வுடைமையாரைப் போன்றே கிருத்துவ மார்க்சிய வட்டங்களும் மலைத்துப் போய் சமைந்து நிற்கின்றன. கிருத்துவ இறையியல் வட்டங்களில் இன்று அம்பேத்கரை நாடிச் செல்லும் முயற்சி, இது போன்ற குழப்பங்களின் பக்கவிளைவோவெனெ எண்ணத் தோன்றுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சாதியொழிப்பிற்கு இருவேறு வழிமுறைகள் உண்டு. தமிழகத்தை விட சாதிவெறி ஓங்கியிருந்த ஈழத்தமிழ் வாழ்வியலில் பார்ப் பனர் தலைமை என்றுமே இருந்ததில்லை; வேளாளரின் தலைமை மட்டுமே இருந்து வந்தது. பார்ப்பனரோ வேளாளருக்கு அடங்கிய இரண்டாந்தர நிலையில் இருந்தனரென்பதே ஈழக் குமுக வரலாறு. ஆனால் அந்த ஈழத்தில்தானே சாதிவெறியும் தீண்டாமையும் காணா மையும் தமிழகத்திலிருந்ததைவிட கூடுதலாக இருந்து வந்தன? அங்கு சென்ற பத்தாண்டுகளாக வளர்ந்துள்ள தேசிய விடுதலைப் போரின் போது சாதிகள் மளமள வெனத் தகர்ந்துள்ள உண்மையோ தமிழகத்தில் சாதி வழி இடவொதுக்கீடு-சலுகையைத் தழுவிய முதலாளிய ஒப்போலை அரசியல் வழியாக பெறப் பார்த்த மாற்றங் களை விட வேகமானவையாகவும் உருப்படியானவை யாகவும் நேர்மையானவையாகவும் இருப்பதை அறிகின் றோம். இதுதான் தமிழீழ வழி. ஆனால் நாம் தழுவிக் கொண்ட இந்தி(ய) வழியோ சாதிக் கழகங்களைக் காளான்களைப் போல் வளரவிட்டு தமிழகத்தில் ஒரு சாதி 'சங்கக்' காலத்தையே படைத்துவிட்டுள்ளன. இஃது ஒரு போலி வழி. ஆகவே சாதியொழிப்பிற்கு தமிழீழ வழி, இந்தி(ய) வழி என எதிரும் புதிருமான இரு வேறு வழிகள் நம்முன் விரிந்து கிடக்கின்றன. தமிழ்த் தேசிய விடுதலைக்குள் அடங்கிய இன்றியமையா குமுகப் புரட்சிக் கூறாக சாதியொழிப்பை வைப்பது தமிழீழ வழி. புதிய பார்ப்பனியத்தை ஓம்பி சாதியத்திற்கு

புத்துயிருட்டி வரும் ஆமை வேக சீர்திருத்த வழிதான் இந்தி(ய) வழி. இதில் எந்த வழி நமக்கு உகந்ததென்பதை உற்றும் கற்றும் அறிவது நல்லது.

இதுவரை சொன்னவற்றையெல்லாம் தொகுத்துரைப் பதெனின், தமிழ்த் தேசிய இன ஓர்மையில் வேரூன்றி தமிழ் மயமான திருச்சவைகள் மதமாற்றத்தை ஊக்குவிப் பதென்னும் இடைக்கால உத்தியின் வாயிலாகவும் சாதியத் திற்குப் புத்துயிருட்டிவரும் புதிய பார்ப்பனியத்திற்கு தமிழக எல்லைக்குள்ளான வரம்பறிந்தும் வாய்ப்பறிந்தும் பாடை கட்ட முடியும். கிருத்துவத் திருச்சவைகளும் இறையியல் பள்ளிகளும் தமிழ்த் தேசிய ஓர்மையைப் பேணிக் காக்கவல்ல திருக்குடில்களாக திரிவாக்கம் பெறு வதன் வாயிலாக தமிழ் மரபிலும் பண்பாட்டிலும் சாதீ யொழித்த ஒரு புதிய வாழ்வியலை வடிக்க தங்களாலான பங்கை ஆற்ற முடியும். தமிழ்த் தேசிய விடுதலைப் போருக்குச் சாதியொழிப்பு ஒரு பிரிக்கவொண்ணா பகுதி யாக அமைவதுதான் சாதியை முற்றாக ஒழிக்க வல்ல போர் உத்தியென அறிந்த நிலைதான் அதற்கான திறவு கோலாகும்.

22-2-91

---

[1] குறிப்பு : பறையரெனப்படுவோரின் உட்பிரிவுகளைப் பார்த்தால், அவர்களில் பறையடிப்போரும் இடுகாடு சுடுகாடு காப்போரும் எண்ணிக்கையில் மிகக் குறைவு. அதாவது எல்லோ ருமே பறையடிப்போர் இல்லை. 'புறஞ்சேரிகளில் வைக்கப் பட்டோர்' 'ஊருக்கு அப்பால் வைக்கப்பட்டோர்' என்னும் பொருளில் பின்னால் வந்த புறயர் என்னும் பெயர்தான் காலப்போக்கில் பறையர் என்னும் இழிவான ஒரு பெயராகத் திரிந்து தொல்தமிழ்க்குடியைக் குறிப்பதாயிற்று.

# 2. தமிழகத்தில் மதமாற்றம்

முகவை மாவட்டத்தைச் சேர்ந்த மீனாட்சிபுரத்தில் பல குடும்பங்கள் அண்மையில் இசுலாமிய மதத்தைத் தழுவின. கூறப்படும் 'இந்து' மதத்தவரை அது பேயறைந்தார்போல் அரட்டியுள்ளது. அவர்கள் எழுப்பி யுள்ள கூற்றுக்கள் .

1. இசுலாமியர் எண்ணிக்கை பெருத்துவிட்டால் இந்துக்கள் சிறுபான்மையாகிட முசுலிம்களின் கை ஓங்கிவிடும்.
2. இந்தியாவை ஓர் இந்துப் பேரரசாக அறிவிக்க வேண்டும்.

3. அரபு நாடுகளின் பணம் இந்தியாவில் மற்றொரு பாகித்தானைத் தோற்றுவித்துவிடும்.
4. மதமாற்றத்திற்குச் சாதிக் கொடுமைகள் காரணமில்லை.
5. காசைக் காட்டித்தான் மதமாற்றம் வலியச் செய்யப்படுகிறது.
6. கிருத்துவமும் இசுலாமும் கூட சாதி வேற்றுமை பாராட்டுகின்றன.
7. இந்துவாகப் பிறந்தவனுக்குப் பிற மதத்தைத் தழுவுகின்ற உரிமை இல்லை.
8. அதனால் மதமாற்றத்தைச் சட்டப்படித் தடை செய்யவேண்டும்.

என்பது போன்றன.

தாழ்த்தப்பட்ட சாதியினரின் மதமாற்றத்திற்கான அடிப்படைக் காரணமாகிய சாதி ஒதுக்கம், சாதிவெறி, தீண்டாமை போன்ற தீமைகளை உறுப்புகளாகக் கொண்டது 'இந்து' மதம். இந்நிலையில், சாதி வேற்றுமைகளை விட்டொழிக்க 'இந்துக்கள்' என்று சொல்லிக் கொள்பவர்கள் முன்வருவார்களா என்று கேட்டால், அக்கேள்வியைத் தட்டிக் கழித்து, தீண்டாமை வழக்கம் மட்டும் வேண்டாம் எனச் சொல்லி 'சாதி இந்துக்கள்' நழுவப் பார்க்கின்றனர். ஆனால், உண்மை நிலை என்ன? சாதிப் பகுப்பினைகள் இருக்கும்வரை, தீண்டாமை என்னும் தீய வழக்கும் இருக்கத்தான் செய்யும். சாதிகளை வைத்துக் கொண்டு தீண்டாமையை மட்டுமே ஒழிக்கப் போவதாகச் சொல்வது, ஆமையின் ஓட்டிலிருந்து மயிரை எடுத்துக் கயிறு திரிக்கப் போவதாகச் சொல்லுவது போன்றது.

சாதிகளை வரணங்களாகத் தொகுத்தபோது, நால் வரணங்களுக்கு அப்பாற்பட்ட அடிமைச் சாதிகளைக்

குடியுரிமை பெற்ற மக்கள் என்று பார்ப்பனியம் என்றுமே கருதியதில்லை. அவர்களைச் சாதி நெறிக்கு அப்பாற் பட்ட வரணமற்றவர்கள் (அவரணர்கள்) என்றே வைத்தது.

அகவாழ்க்கையைப் பற்றிய ஒழுக்கங்களை எடுத்துக் கொண்டு எண்வகை மணங்களைப் புற்றிக் குறிப்பிடுகின்றது தொல்காப்பியம். களவு ஒழுக்கத்தைக் குறிப்பிடுகின்ற 'யாழோர் கூட்டம்'. (காந்தருவம்); அடங்காக் காளையை அடக்குவது, திரிகின்ற காட்டுப்பன்றியைக் கொல்வது, விற் பயிற்சியில் வெல்வது போன்ற வீரச் செயல்களைச் செய்து பெண் கொள்கின்ற 'அசுரம்'; வன்முறையில் பெண்ணைக் கவர்ந்து செல்கின்ற 'அரக்கதம்'; பொருந்தா மணமாகிய 'பேய்' போன்ற நான்கு வகை மணங்களை "பெருந்திணை" என்று அது குறிப்பிடுகின்றது. இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகை உரிப்பொருள்களையுடைய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய அய்ந்திணை ஒழுக்கங்களும் அடியோரும் வினைவலரும் ஆகிய கீழ்மக்களுக்கு இல்லை என்றும் குறிப்பிடுகின்றது. ஒருதலைக்காமம் என்றாகிய கைக்கிளையும் பொருந்தாக் காமம் என்றாகிய பெருந்திணையும் மட்டுமே அக்கீழ்சாதியினருக்குப் பொருந்தும் என்கிறது தொல்காப்பியம். 'பிறர்க்குக் குற்றேவல் செய்வோரையும், பிறர் ஏவிய தொழிலைச் செய்வோரையும் தலைமக்களாக்கி, கைக்கிளை பெருந்திணை தவிர்த்த பிற திணைகளில், பாப்புனையக் கூடாது' என்னும் பொருளில்,

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்"

(அகத்திணையியல், 23)

என்கிறது அத் தொல்காப்பியம். கலித்தொகையில் மருதக்கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி ஆகியவற்றில் மட்டும் வருகின்ற அடியோரைப் பற்றிய பாடல்களோ அக்கீழ்நிலை மக்களைக் கேலியாக நகையாடி எழுதப் பெற்ற பாடல்கள்.[1]

பெரும்பான்மையினராக இருந்த கீழ்சாதி உழைக்கும் மக்களின் ஒழுக்கங்களை முறையான அக ஒழுக்கம் அற்றவர்கள் என்னும் பொருளில் அவர்களின் ஒழுக்கத்தை 'அகப்புறம்' என்று குறிப்பிட்டார் நச்சினார்க்கினியர்.

இவ்வகையில், மிக நுட்பத்துடன் ஆய்ந்து நுண்மையாகப் பகுத்துவைத்து உழைக்கும் மக்களை பண்டு கீழோராக வைத்தது பார்ப்பனிய சாதிமுறை. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பார்ப்பனிய மீட்சி இயக்கம் நால்வரணங்களுக்கு உட்பட்ட சாதியினரை 'சாதி இந்துக்கள்' என்று குறிப்பிட அது வழி செய்தது. 'இந்து' என்ற பெயரும் கருத்தும் வட இந்தியாவில் முசுலிம்களின் படையெடுப்பிற்குப் பின்னரே உருவானது. தமிழகத்தைப் பொறுத்த வரை, அஃது ஆங்கிலேய எதிர்ப்பின்போது உருவாகிய பார்ப்பனிய மீட்சி என்கின்ற புறக்கருத்தின் தாக்கத்தால் எழுந்ததேயாகும். நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்திலும் கூட 'இந்து' என்னும் பெயர் தமிழில் வழங்கியதில்லை. ஆகவே, தமிழர்களை 'இந்துக்கள்' என்று பெயரிட்டு அழைக்கின்ற வழக்கு அண்மைக்கால வழக்கே ஆகும். அது 'பாரதம்' என்னும் இக்காலப் புதிய பார்ப்பனியக் கொள்கையால் உருப்பெற்ற கருத்தாக்கம்.

பார்ப்பனிய மறைகளும் முறைகளும் குறிப்பிடுவது போலவே, ஒடுக்கப்பட்ட உழைக்கும் சாதிகள் என்றுமே நால்வரணப் பாகுபாடுகளுக்கு உட்பட்ட 'இந்துக்களாக'

இருந்ததில்லை. இடைக்காலத்தில் மால் மதமும், 'பற்றி' (பக்தி) இயக்கமாக உருவானது. இராமானுசர் வாயிலாக மதமாற்றம் செய்விக்கப்பெற்ற ஒடுக்கப்பட்ட சாதியினர் யாவரும் அப்போது தங்களை 'வைணவர்கள்' என்று சொல்லிக் கொண்டனரே அன்றி, 'இந்துக்கள்' என்று சொல்லிக் கொண்டதில்லை. அதைக் கொண்டு, தமிழர்கள் — மேல்சாதியினராயினும் கீழ்ச்சாதியின ராயினும் — 'இந்து' என்று என்றுமே இருந்ததில்லை என அடித்துச் சொல்லலாம். வெள்ளையர் காலத்தில், பார்ப்பனியச் சாதிமுறையை முருகன், மால், சிவன், தாய்த்தெய்வம் போன்ற வழிபாடுகளுடன் ஒன்றாய் போட்டுக் குழப்பி, ஓர் அவியல் கருத்தாக்கி, அத்தகைய அவியல் கருத்தை வெள்ளையர்கள் ஓர் இசுலாமியர் எதிர்ப்பு அரசியல் கொள்கையாக நிலைநிறுத்திய போதே 'இந்து' மதம் பிறந்தது.

ஓரிரு நூற்றாண்டுக் கால வளர்ச்சியை மட்டுமே யுடைய 'இந்து' நெறியை விட்டு கிருத்துவ மதத்தையோ இசுலாமிய மதத்தையோ நோக்கி மக்கள் பெயர்ந்தது மேல் சாதியினரை ஓர் உலுக்கு உலுக்கி வைத்தது. அராபியர்களுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழ் மரக்காயர்கள் வெள்ளையர் காலத்துக்கு முன்பே மதம் மாறியதும் உண்டு. சென்ற நூற்றாண்டில் அம் மதமாற்றத்தைப் பெருமளவு செய்தவர்கள் கிருத்துவ சமயவூழியரே (Missionaries) ஆவர். சமணத்தையும் புத்தத்தையும் இடைக்காலத்தில் தமிழகத்திலிருந்து விரட்ட முற்பட்ட சிவமதமும் மால் மதமும் ஒரு வகைக் கூட்டணியைத் தொடக்கத்தில் வளர்த்துக் கொண் டாலும், அஃது, 'இந்து' மதம் என்னும் பெயரில் நடை பெறவில்லை என்பதைப் பார்க்கத் தவறுதல் கூடாது.

ஒவ்வொரு சமயமும் ஒரு முற்போக்கான எதிர்ப்பு இயக்கமாகவே தொடக்கத்தில் இருந்துவந்ததை

வரலாறு புலப்படுத்துகின்றது. பின்னர் அச் சமயம் என்னும் விளக்கம் மதம் என்னும் கட்டுக்கோப்பான அமைப்புக்குள் இறுகிக் கெட்டிப்பட்டது. அம்மதம், முந்திய நெகிழ்ச்சியையும் ஓட்டத்தையும் உணர்வையும் ஓர்மையையும் கவர்ச்சியையும் இழந்தது. அது தழுவி வளர்ந்த சமயக்கோட்பாடு, புதிதாக அமர்ந்துவிட்ட ஆண்டைகளின்– வகுப்புகளின் —ஆட்சியை உறுதிப் படுத்தவல்ல பிற்போக்கான வறட்டுக் கொள்கை யாகியது. முந்திய உள்ளீட்டை அஃது இழந்தது. முன் னிலைக்குப் பின்னிலை எதிர்மறையாகியது. உலகை ஏதோ ஒருவகையில் விளக்கிய சமய ஆசிரியர்களின் அல்லது சமயத் திருத்தொண்டர்களின் (Saints) முதல் எதிரிகளாக அமைபவர்கள், அவர்களைச் சொல்லி வயிறு வளர்க்கின்ற பூசாரிகளே ஆவர். பூசாரித் தொழில் இவ்வகையிலும் நிலைத்தது.

இராமானுசர் பள்ளரையும் பறையரையும் பிற கீழ்ச் சாதியினரையும் மதமாற்றி, (காற்று, கறுப்பு, அணங்கு, மாரி, காளி, கூளி போன்ற) பேய்த் தெய்வங்களை வழிபட்டு வந்த அக்கீழ்ச்சாதி மக்களை, உயர்சாதி யினரின் வழிபாட்டுக்குரிய திருமாலை வழிபடும்படி செய்தார். அவர்களில் சிலருக்குப் பூணூல் போட்டுப் பார்ப்பனராக்கினார். சாதிக் கொடுமைகளுக்கு எதிர்ப்பான ஒரு பெரும் கலக இயக்கம் அஃது என்பதை மறுப்பதற் கில்லை. ஆனால், அதனாலும் சாதியும் ஒழியவில்லை. புதிய சாதிகள்தான் உருவாகின. ஏற்கெனவே மால் வழிபாட்டைத் தழுவி நின்ற பார்ப்பனர்கள், புதிதாகச் சேர்ந்துகொண்ட கீழ்ச்சாதி மதமாறிகளுடன் கொள் வினை கொடுப்பினை கொள்ள வேண்டி வருமே என்று அஞ்சித் தங்களுக்குள் வகுத்துக் கொண்ட எல்லைகளே வடகலை, தென்கலை என்னும் இருபெரும் பிரிவுகளை அம்மாலிய பார்ப்பனரிடம் தோற்றுவித்தன. பார்ப்பன வைணவர்களைக் கீழ்ச்சாதி வைணவர்களிடமிருந்து

அவ்வாறு பிரித்து வைப்பதற்கு முறை செய்தவர்களில் சிறப்பானவர் வேதாந்த தேசிகன் ஆவார்.

1878-ஆம் ஆண்டில் அன்று தெற்குத் திருவாங்கூர் மன்னராட்சிப் பகுதியில் இருந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவப் பெற்ற "மீட்புப் படை" (Salvation Army), தீண்டப்படாத கீழ்ச்சாதிப் பண்ணையடிமைகளைக் கிருத்துவ மதத்திற்கு மாற்றியபோது நிகழ்ந்தவை நினைவில் கொள்ளத் தக்கவை. அத்தகைய மத மாற்றத்தால், குறிப்பாக சாணார் (நாடார்) சாதியினர் ஊழியம் என்னும் கூலியில்லாக் கட்டாயப் பணியை ஞாயிற்றுக் கிழமைகளில் செய்வதிலிருந்து 1814-ஆம் ஆண்டுமுதல் விடுபட்டதுடன், பிற நாட்களிலும் அவ்வாறு செய்யோம் எனப் போர்க்கொடி தூக்கினர். சாதிச் சட்டங்கள், (உயர்சாதியினரிடமிருந்து விலகி நிற்க வேண்டிய) தீட்டுத் தொலைவு போன்ற கட்டுப்பாடுகள் அதனால் உடைபடத் தொடங்கின. கிருத்துவ சமயவூழியர்கள் ஏற்படுத்திய பள்ளிகளில், தீண்டப்படாத சாதியினரின் பிள்ளைகளும் கல்வி பெறுகின்ற வாய்ப்பைப் பெற்றனர். தீண்டப்படாத சாதிப் பெண்கள் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொள்ள சட்டை போட்டுக் கொள்வதற்கு இருந்த சாதித் தடையை விலக்கி, அன்று திருவாங்கூர் மன்னராட்சியில் புற அமைச்சராக (Dewan-Resident) இருந்த கர்னல் மன்ரோ, 1813-ஆம் ஆண்டில் இட்ட ஆணைக்கு எதிராகப் பின்னர் நடந்த சாதிக் கலவரங்கள் பல. இவ்வகையில் கீழ்ச்சாதி மக்கள் கிருத்துவ மதத்திற்கு மாறியதால் நிகழ்ந்த குமுக எழுச்சிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. அந்நிலை, பின்னர் அதனுடைய எதிர்மறையாகியது ஒரு பின் கதை. அக்கிருத்துவ மதத்தவரும் சாதி வேற்றுமைகளுக்கு உள்ளாகி, அச் சாதி ஒதுக்கு முறையையும் கொடுமையையும் எதிர்க்கவல்ல திறனின்றி, இன்று சாதிகளாய் வகுபட்டுக் கிடக்கின்றனர். இதே

காலத்தில்தான், தமிழகத்தில் இன்னும் பலர் இசுலாம் மதத்தையும் தழுவலாயினர்.

ஒவ்வொரு மதமாற்றமும் குமுகத்தின் அடிமட்டத்தில் இருக்கின்ற நலிந்த மக்களுக்கு அகநிலையிலாவது ஒரு பொய்மை விடுதலையையும்-புறமையில் சில மேலோட்ட மான வளர்ச்சிகளையும்—தோற்றுவிப்பதை இதனால் உணர முடிகின்றது. பண்டைக் காலத்தில் சமணமும், புத்தமும், இடைக்காலத்தில் சிவனிய மதமும்,மால்மதமும் பிற்காலத்தில் இசுலாமும், கிருத்துவமும் வகுத்த பங்குகள் யாவும் தமிழகத்தில் அரும்பி வளர்ந்த சாதி ஒதுக்கு முறையையும் தீண்டாமைக் கொடுமையையும் எதிர்த்து நடந்த நீண்ட நெடும் போராட்டத்தின் பல்வேறு நிலைகளாகும்; தொடர்களாகும். தாழ்த்தப்பட்ட சாதி யினரில் சிலர் இன்று மீண்டும் இசுலாத்தைத் தழுவ முனைந்துள்ளது அடிநிலை மக்களின் அந்த நெடும் பயணத்தின் தொடர்ச்சிதான் என்பதில் அய்யமில்லை.

மீனாட்சிபுரம் எழுப்பியுள்ள கேள்விக்குறிக்குத் தமிழகப் பொதுவுடைமையர் தருகின்ற விளக்கம் என்ன?

இதைப் பற்றி தமிழகப் பொதுவுடைமையரிடம் ஏறக் குறைய ஓர் ஒத்த கருத்து இல்லை. தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந்து வந்தவர்கள், கட்சி யாதாயினும், இம்மத மாற்றத்தைப் பொதுவாக வரவேற்கின்றனர். அவர்களில் பொதுவுடைமையரும் அதற்கு விலக்கு இல்லை. மாறாக, மேல்சாதிப் பின்னணியிலிருந்து வந்த பொது வுடைமையரில் பலர், பொதுவாக, இம்மத மாற்றத்தை எதிர்க்கின்றனர். அவர்களில் புறனடையோ இங்கொன்று அங்கொன்று மட்டுமே ஆவர். அம் மேல்சாதிப் பொது வுடைமையர்கள் மீனாட்சிபுரம் போன்ற மத மாற்று நிகழ்ச்சிகளை எதிர்ப்பதற்காகச் சொல்கின்ற சப்பைப் காரணங்கள் இவை:

1. மத மாற்றத்தினால் தாழ்த்தப்பட்ட சாதியினரிடத்தில் அடிப்படை மாற்றம் ஏதும் வந்துவிடப் போவதில்லை;
2. கிருத்துவ மதத்திற்கும் இசுலாமிய மதத்திற்கும் மாறிச் சென்றவர்களிடத்திலும் கூட சாதி வேற்றுமைகள் உண்டு;
3. "இந்து" மதத்தை மட்டும் எதிர்ப்பதையும் பிற மதங்களை ஆதரிப்பதையும் விடுத்து, எல்லா மதங்களையும் ஒருசேர எதிர்க்க வேண்டும்;
4. இசுலாமிய மதம் மிகவும் வெறிபிடித்த மதமானதால், இசுலாமியராக மாறினோர் புரட்சிக்கும் ஒப்புரவு (சோசலிச) வாழ்வியலுக்கும் மிகப் பெரும் தடங்கலாக இருப்பர்
5. இசுலாம், குடியாட்சி நெறிக்கு ஒவ்வாதது;
6. புரட்சி வந்துவிட்டால் சாதிக் கொடுமைகள் தானாக மறைந்து போய்விடும்;
7. இசுலாம். பெண்ணடிமை முறையை மிகையாகப் பயில்கின்ற பிற்போக்குப் பண்பாட்டைப் படைக்கும் என்பது போன்றன அவையாம்.

மத மாற்றத்தினால் சாதிக் கொடுமை ஒழிந்துவிடப் போவதில்லை என்பது உறுதி. ஆனால் சாதிக் கொடுமையை ஒழிப்பதற்குப் பொதுவுடைமையர் ஆற்றிய தொண்டோ குறிப்பிடும் அளவுக்கு இல்லை. கூலிப் போராட்டத்தை வகுப்புப் போராட்டத்துடன் சமப்படுத்தி மயங்கி அந்நிலையில் அவ்வகுப்புப் போராட்டம் முற்றிப் புரட்சி வெடிக்கையில், சாதியம் தானாக மறைந்துவிடும் என்பது ஒரு செப்படி வித்தை. அஃது இன்றைய அடிமைத் தமிழகத்தில் முதலாளியம் எஞ்சிய நிலக் கிழமையுடன் இணைந்து முரணிட, முதலாளியக் கூறு மேலோங்க நிலக்கிழமைக் கூறு தேய்ந்து வருகின்ற இயற்பாட்டைப் பார்க்காத நிலை.

முதலாளியத்திற்கு முந்தி வழிவழியாய் வந்த இறுகிய வகுப்புகளே சாதிகள். ஆகவே, தமிழகத்தை அரை நிலக்கிழமைப் பொருளியலாக பார்க்கையில், அந்த அரை நிலக்கிழமைப் படைப்பு முறையுடனும் உறவுடனும் உறவுடையனவாகவே சாதி ஒதுக்கு முறையைப் பார்க்க வேண்டும். இந்நிலையில், இருவேறு குமுக அமைப்புகள் ஒன்றியும் முரணியும் இருக்கையில், அதன் வெளிப்பாடாகத் தனியாள் ஒவ்வொருவரிடமும் அமைகின்ற குமுகப் பண்பாட்டில் இரு வகைக் கூறுகளைப் பார்க்க முடிகிறது. அதாவது, ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் இருவகைத் தன்மைகள் உண்டு. ஒரு குறிப்பிட்டசாதியின் உறுப்பினராக இருக்கின்ற அவர், அதேவேளையில் முதலாளிய உறவுகட்கு உட்பட்ட இக்கால வகுப்பு ஒன்றின் உறுப்பினராகவும் இருக்கின்றார். வகுப்புப் போராட்டத்தை நடத்த முற்படுகையில், சாதியைக் காட்டி அவ்வகுப்புப் போராட்டத்தை முதலாளி உடைக்க முற்படுவது, அவ்விரு குமுகத்திடைகளுக்கும் இடையிலான முரண்பாட்டையே காட்டுகின்றது.

சாதியத்தைப் பற்றி உற்று ஆய்ந்த கேய்ல் ஓம்வேத் ( Gail Omvedt ) என்னும் அமெரிக்க மார்க்சிய குமுகியலார் அச்சாதி வகுப்பினைகள் நிலக்கிழமைக்கும் முந்தியன என்று சுட்டிக் காட்டியுள்ளார். பின்னர் நிலக்கிழமை உறுதிப்பட, அது நிலக்கிழமை அமைப்பிற்குரிய தொழிற் பிரிவினைகளுக்கும் அடிக்காலாக அமைந்தது. இங்கு முதலாளியம் மேலோட்டமாக திணிக்கப் பெற்ற போது, அம் முதலாளிய வகுப்புகளும் அச்சாதி வேற்றுமைகளைத் தழுவியனவாகவே தொடக்கத்தில் அமைந்தன.

கோவைப் பஞ்சாலையில் நெசவாளிகளாக பணிபுரிய வழிவழியாய் நெசவுத் தொழில் செய்து வந்த சாதியினரும், நாயுடு, கவுண்டர் போன்ற பஞ்சாலை முத

லாளிகளின் சாதியினருமே மிகையாகச் சேர்த்துக் கொள்ளப்பெற்றனர். அங்கெலாம் கடைநிலைத் துப்புரவு தொழிலைத் தவிர்த்துப் பிற துறைகளில் தீண்டப்படாத சாதியினரை வேலைக்கு அமர்த்துகின்ற நிலை பொதுவாக இல்லை. கனிச்சுரங்கப் பணி, தொடர் வண்டி இருப்புப் பாதை போடுகின்ற அல்லது திருத்து கின்ற கூலி வேலை, தோட்டத் தொழில் போன்ற கடின மான உடல் உழைப்புத் தேவைப்படுகின்ற கீழ் நிலைக் கூலிப் பணிகளுக்குப் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினரே அமர்த்தப்பெற்றனர். அவர்களின் மேற் பார்வையிடுபவர்கள் சூத்திர வரணத்து மேல் சாதியின ராகவே பெரிதும் அமைந்தனர். கணக்கு வழக்கு, வங்கி, அரசுத்துறை, அலுவலகப் பணி போன்றவற்றில் பெரிதும் பார்ப்பனராகவும்—பின்னர், அவர்களில் ஒரு பகுதியினர் வேளாளராகவும் முதலியார்களாகவும்—இருக்க நேர்ந்தது. அரசுத்துறை ஊழியர் கட்டமைப்பு, நால்வண்ண முறையைப் போலவே நான்கு நிலைகளாக வெள்ளையரால் உருவாக்கப் பெற்றது. மார்வாரிகள், குசராத்தியர் போன்ற திமிங்கலங்களை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டால் — நாட்டுக் கோட்டைச் செட்டியார் களும் நாயுடு சாதியினரும் உருவாக்கிய பஞ்சாலைத் தொழிலிலும் பிறவற்றிலும் போடப்பட்ட தொழில் முதலீடுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தமிழ்ப் பார்ப்பனர்கள் பெரும் தரகு முதலாளிகளாகவும் சிறு தொழில் முதலீட்டாளர்களாகவும் இன்று வளர்ந்துள் ளனர் அப்பார்ப்பன முதலாளிகள் நடத்துகின்ற டி. வி. எசு போன்ற நிறுவனங்களில், தேர்ச்சிமிக்க தொழிலாளர் கள் உட்பட, மேலாளர்களாக அமர்த்தப்படுபவர்களில் பெரும்பகுதியினர் சாதி அடிப்படையில் அமர்த்தப் பெற்ற பார்ப்பனராகவும், ஒரு சிலர் புதிய பார்ப்பனராக வும் இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். இந் நிலையில், சாதி வழியில் முதலாளிய உறவுகளையும்

அமைத்துக்கொண்ட அவலத்தைப் பார்க்கப் பெருக்காடி தேவையில்லை. திராவிடர் கட்சிகளும் பொதுவுடைமைக் கட்சிகள் என்று சொல்லிக் கொள்ளும் புரட்டர் கட்சிகளும் மார்க்சிய – இலெனினியர் என்று சொல்லிக் கொள்கின்ற மீத்தீவிர "இடது"களும் போன்ற பல அரசியல் கட்சிகளில் நடக்கின்ற உட்கட்சிப் போராட்டங்களும் குழுத்திரட்சிகளும் சாதி வழியே அமைந்திருக்கின்ற இழி நிலையைப் பார்க்கலாம். தங்களை "இந்துக்கள்" என்று சொல்லிக் கொள்கின்ற "பொதுவுடைமையரும்" இங்கு உண்டு!

கிருத்துவ மதத்தவரிடம் இங்கு 50 விழுக்காடாவது சாதிகள் உண்டு, மறுப்பதற்கில்லை. ஆனால், சாதி வழியில் பிறப்பால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என மக்களைக் கடவுள் படைத்ததாகச் சொல்லவல்ல மதச் சான்றும் படைப்புக் கதையும் கிருத்துவ மதத்தில் இல்லை. இசுலாமியரிடமும் 20-30 விழுக்காடு சாதி வழக்கு இருக்கலாம். ஆனால் ஆண்டவன் என்பவன் மக்களை ஏற்றத் தாழ்வுடையவர்களாக படைத்துவிட்டதாக இசுலாம் கூறவில்லை. கிருத்துவ, இசுலாமிய மதங்களில் இருக்கின்ற சாதி வழக்குகள் முந்தைய சாதியத்தின் எச்சங்களேயாகும். ஆனால், "இந்து" மதமோ, சாதி ஒதுக்கு முறையின் மறுபெயர். "இந்து" என்பவர் ஒரு சாதியின் உறுப்பினராகக் கட்டாயம் இருந்தே தீர வேண்டும். அச் சாதி வரணங்களை முறைமையாக்கிச் சொல்கின்ற ஒரு தனிப்படைப்புக் கதை அதற்கு உண்டு. அதனால், "இந்து" மதத்திலிருந்து எந்த அளவுக்கு ஒருவர் விலகிச் செல்கின்றாரோ, அந்த அளவுக்கு அவர் சாதி ஒதுக்கு முறையிலிருந்தும் விலகிச் செல்கின்றார்.

சாதி எதிர்ப்பு இயக்கத்தைப் பொதுவுடைமையர் முன்னின்று நடத்தாத நிலையில், அவர்களே அச் சாதிக் காழ்ப்புகளிலிருந்து விடுபெறாத நிலையில், ஒடுக்கப்

பட்ட சாதியினர் ஓர் இடைக்கால விடுதலையாகக் கருதி, மத மாற்றத்தை நாடுகின்றனர். அஃது அந்த ஏதிலி மக்களுக்கே தெரியும். இந்து மதத்திற்கு அடிப்படை யான சாதி ஒதுக்குமுறைக்கு எதிர்ப்பைக் காட்டுகின்ற கலகச் செயலாகவே தங்களின் மத மாற்றத்தை அவர் கள் கருதுகின்றனர். ஓர் இடைநிலை வளர்ச்சியாக—கையறு நிலையாக—அம்மத மாற்றம் இருப்பதை மறுப்ப தும் மறைப்பதும் இருப்பன இருப்பனவாகவே அப்படியே இருந்துத் தொலையட்டுமே என்று சொல்கின்ற மாற்றம் விரும்பாமையையே குறிக்கும். அது பிற்போக்குத் தன்மை கொண்டது. சாதிக்கொடுமைகளை எதிர்த்து மக்கள் ஏதோ ஒரு வகையில் கலகம் செய்வதில் இருக் கின்ற முறைமையை எதிர்க்கின்ற நிலை அது. "முற் போக்கு" என்றும் "புரட்சி" என்றும் பேசிக்கொண்டே சாதிவெறியருடனும் மேற்சாதி நலன்களுடனும் இறுதியில் அம் மேல்சாதிப் பொதுவுடைமையர் இணைகின்ற கயமையே அஃது என்பதில் அய்யமில்லை. இக்கயமை நிலை தமிழகப் பொதுவுடைமையரில் மேல்சாதியினர் பலரையும் உண்டு செரித்து நிற்கின்றது. சாதி ஒதுக்கு முறையை திறம்பட எதிர்ப்பதைத் தட்டிக் கழித்து, இந்தி(ய) 'ஒன்றியம்' என்னும் சிறைக்கூடத்தில் அடிமைப் பட்டு கிடக்கின்ற பல்வேறு நாடுகளையும் நாட்டினங் களையும் ஒடுக்கியும் சுரண்டியும் வருகின்ற தில்லி அரசின் கொள்கைக்கு முழுமையாக ஒத்துழைப்பு தருவதன் வாயிலாக அந்த இந்தி-இந்து வல்லரசு சொல்லாமல் சொல்லி வருகின்ற 'அகன்ற பாரதம்' என்னும் கொள்கைக்கு உடன்படுகின்ற மேல்சாதி பொதுவுடைமையரை 'சிவப்பு R. S. S' என்று அழைக்க லாகாதோ?

சாதி முறையைத் தோற்றுவித்தவர்கள் தமிழ்ப் பார்ப்பனர்கள். நாடோடி அநாகரிகர்களாக இத்துணைக் கண்டத்திற்குள் புகுந்த ஆரியரையும் அச்சாதிமுறை

விழுங்கி ஏப்பம் விட்டது. அவ்வாறு சாதியத்தால் உண்டு செரிக்கப் பெற்ற அவுணர்கள், ஆரியம் என்னும் இன வெறிக்கொள்கை வழியாக தாங்கள் கற்ற தமிழ்ப் பண் பாட்டையே அழித்து வேகமாகப் பரவினர். இடையில் வந்த இசுலாமிய துருக்கியர் இனத்தில் வன்தாக்குதல்களா லும் அச்சாதியும் ஒழியவில்லை. கிருத்துவ மதத்தையும் அது விழுங்கியது. இறுதியில், புறத்தே பொதுவுடைமைய ராகக் காட்டிக் கொண்ட புரட்டர்களையும் "புரட்சி யாளரையும்" கூட அச்சாதியம் விழுங்கித் தொலைத்தது. இஃது ஒரு வரலாற்று விந்தை!

இசுலாமிய மதம் குடியாட்சி மரபுக்கு ஒவ்வாதெனில், கறுப்பர்கள் மீது தென் ஆப்பிரிக்கா கடைப்பிடிக்கின்ற கொடுமையிலும் கொடுமையான சாதிய ஒதுக்குமுறையை வடித்தெடுத்த "இந்து" மதம் மட்டும் எந்த அளவுக்குக் குடியாட்சி மரபுக்கு உகந்தது? இந்து மதம் என்னும் கொடுநெறி ஒரு பிடி அழிந்தாலும், அது சாதி ஒதுக்கு முறை அந்த அளவுக்கு அழிந்தது என்றுதானே பொருள் படும்? ஆகவே, நலிந்த மக்கள் தங்களின் அறிவுடை மைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கின்ற மதமாற்றம் என்னும் தற்காப்பு அல்லது நழுவல் முயற்சி—உள்ளடக்கத்தில் தொடக்கத்தில்—முற்போக்கானதுதான். இந்நிலையில், எல்லா மதங்களையும் ஒருசேர எதிர்ப்போம் என்பவரின் கூற்று, ஒரு மதத்தையும் உருப்படியாக எதிர்க்காத ஒரு சாக்குப்போக்கு.

பார்ப்பன எதிர்ப்பையே தம்முடைய முன்னணிக் கொள்கையாகக் கொண்டு செயல்பட்ட திராவிடர் கட்சிகளே சாதிமுறையிடம் பணிந்து கொடுத்துவிட்ட வேளையில், சாதி எதிர்ப்பை என்றுமே முன்னிலைப் படுத்தாத தமிழகத்தின் போலிப் பொதுவுடமைக் கட்சிகள், தீண்டப்படாத சாதியினர் படுகின்ற கொடுமை களுக்கும் இழி நிலைகளுக்கும் மாற்றாக வெற்று வாய்ப்

பந்தல் போடும்போது, நலிந்த சாதியினர் எப்படி மன மூவந்து செவி மடுப்பர்?

இதற்கிடையில், தமிழகத்தின் ஒரு பெரும் பகுதி இசுலாமியரானால், ஒன்றும் குடி முழுகிப் போகப் போவ தில்லை. இன்று நல்ல தமிழில் பேசிப் பழகி, நல்ல தமிழ்ப் பற்றுடன் தெரிந்தோ தெரியாமலோ தமிழைக் காப்ப வர்கள், பிறரையும் பார்க்க, தமிழ் முசுலிம்களே என்பது உறுதி. சமற்கிருத பண்பாட்டுச் சேற்றுக்குள் சிக்கிக் கொள்கின்ற தாழ்வு மனப்பான்மையும் புதிய பார்ப்பனிய கவர்ச்சிகளும் தமிழ் முசுலிம்களிடம் மிகக் குறைவு. இன்று கடலுக்கு அப்பால் தொலைகிழக்கில் மலையா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழ் வழங்குகின்ற தெனின், அது தமிழ் முசுலிம்களையே பெரிதும் சாரும். தமிழ் நாட்டுணர்ச்சியில் குன்றாத தமிழ் முசுலிம்களைக் கண்டு தமிழினம் அஞ்சவும் தேவை இல்லை. மீனாட்சி புரங்களைக் கண்டு பொதுவுடைமையரும் தமிழினமும் குழம்பவும் தேவையில்லை.

மார்க்சியம் ஒரு மாபெரும் அறிவு ஊற்று. அஃது இசுலாமைக் கண்டு அஞ்சுவதில்லை. இசுலாம் மதத்திற்கு மாறிவிட்டால் அக்கீழ்மக்கள் புரட்சிக்குத் தடையாகி விடுவரனெ பொதுவுடைமையர் கருதுவது, இன்றைய இசுலாமிய அடிப்படையியல் (Islamic fundamentalism) மார்க்சியத்தைவிட வலிமையானது என்றுதானே பொருள்படும்? இஃது ஒரு போலி வழக்குரை. கையாலா காதவரின் சாக்குப் போக்கு.

மார்க்சியம் தமிழ் மண்ணில் வெற்றிபெற வேண்டு மாயின், ஒடுக்குமுறைக்கு உள்ளாகிப் புண்பட்டு மனமொடிந்து நம்பிக்கை இழந்து நிற்கின்ற பள்ளருக் கும் பறையருக்கும் பிற கீழ்ச்சாதி மக்களுக்கும் நம்பிக்கைத் தரவல்ல ஆற்றலாக, அம்மார்க்சியம், அந்த நலிந்தோரின் உள்ளங்களில் புகவேண்டும்.

அவர்களைத் தட்டி எழுப்பி, தலையெழுத்துப் பொய்யை உடைக்க வேண்டும். மார்க்சியத்தை அவர்கள் உணர்வால்—ஓர்மையால்—எண்ணத்தால்—உள்ளத்தால் –அறிவால் பற்ற வேண்டும். தாழ்வு மனப்பான்மையால், அவர்களில் வளர்ந்தோர் புதிய பார்ப்பனியத்திற்கு பலியாகாமல் தடுத்து மீட்க பெற வேண்டும். மார்க்சியம் என்னும் விடுதலை இலக்கணம் அப்போதுதான் உண்மையான பொருண்மை உள்ளடக்கத்தைப் பெற்றதாகும். மார்க்சியம் அவர்களின் ஓர்மையையும் உள்ளத்தையும் எண்ணத்தையும் அறிவையும் கற்பனையையும் நம்பிக்கையையும் அவ்வாறு பற்றிவிட்டால், அக்கீழ்ச் சாதி மக்கள், கழியையும் கம்பையும் வேலையும் வாளையும் துமிக்கியையும் தேடுவர். விடுதலையை நாடுவர். அணியெனத் திரள்வர். அமைப்பென உருவாகுவர். மார்க்சியம் காட்டுகின்ற விடுதலை இலக்கணம் அதனால் செயல் வடிவம் பெறும். புரட்சி ஈடேறும். மதமாற்றம் என்னும் இடைநிலை—கையறு நிலை—அற்றுப்போய் அவர்கள் அப்போது இன்றைய நடப்பு நிலையிலிருந்து மிக்குயர (Transcend) முடியும். அது கைப்படாத வரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் இசுலாமிய மதத்திற்கோ பிற மதத்திற்கோ மாறுவதில் தவறொன்றும் இல்லை. அதை எதிர்ப்பதில் பொருளும் இல்லை.

நகர்ப்புற இயக்கமாகவும் கூலி இயக்கமாகவும் முடங்கிவிட்ட பொதுவுடைமை இயக்கம், நாட்டுப்புற இயக்கமுமாகி—போர் உத்தியில் தேசிய விடுதலை இயக்கமாகி—மாபெரும் தேசிய விடுதலை முன்னணியை அமைத்துக் கொள்ளுமாயின்—மக்கள் போரை போராட்ட முறையாக வடித்தெடுக்குமாயின்—அடிநிலை மக்களை அது போர்க் கோலம் பூணத்தான் செய்ய வேண்டும். வகுப்புப் போரின் ஒரு வடிவமாகத் தேசிய விடுதலை இயக்கத்தை வார்த்தெடுப்பதாயின், அதனால் விளைகின்ற தேசிய முன்னணியின் வாயிலாகப் படைமறவர்களாக்கப் பெற்ற

பள்ளரும், பறையரும், பிறரும், பல்லாயிரம் ஆண்டு களாக மாறி மருவிவரும் வாழ்வியல் திணைகளை ஊடுருவி மாறியும் மாறாமல் வந்த சாதி ஒதுக்குமுறைக் குக் கல்லறை கட்டப் போவது உறுதி.

இதுவரை நிகழ்ந்த சாதி எதிர்ப்பு இயக்கங்களும் கலகங்களும் முயற்சிகளும் கொள்கைகளும் தோற்ற தற்குக் காரணம், அவை யாவும் அப்பள்ளனிடமும் பறையனிடமும் நலிந்தோர் பிறரிடமும் அறிவியல் வழி வந்ததொரு மாந்த விடுதலைக் கொள்கையை அரசிய லாக்கித் தந்து, துள்ளுகின்ற வேலையும் வாளையும் படையையும் படைப் பயிற்சியையும் தராமையே காரணம். அதைச் செய்யவல்லது, மார்க்சியத்தைத் தமிழகச் சூழலுக்கேற்ப பழகுவதே ஆகும். மார்க்சியத் தின் அடிப்படையில் தேசிய விடுதலையை நாடுவதே யாகும்.

*1981*

---

[1] குறிப்பு: இந்திரா பார்த்தசாரதி எழுதிய அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும், ஆராய்ச்சி, அக்டோபர், 1972